GOKULAM

ஜனவரி 2010 • 80 பக்கங்கள் • விலை ரூ.8/-

கோகுலம்

குழந்தைகளின் குதூகலம்!

துவும் நம்ம வேலைதான்!



கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1401

1402

1403

1404

1405

1406

1407


1408

1409

1410

1411

1412

1413

1414

1415

1416

1417

1418

1419

1420

1421

1422

1423

1424

1425

தொடர்ச்சி 3 ஆம் அட்டையில்...

கல்கி

கோகுலம்

ஜனவரி 2010 மலர் : 27 இதழ் : 12

உயிர்களிடத்தில் அன்பு வேணும் – தெய்வம்
உண்மையென்று தானறிதல் வேணும்
– பாரதியார்

புரிந்து கொள்வோம்!



எழுபத்தேழு வருடங்கள் விளையாடியபின், கிரிக்கெட்டில் முதன்முதலாக டெஸ்டின் தர வரிசைப் பட்டியலில், முதலிடத் தைப் பிடித்திருக்கிறது இந்திய கிரிக்கெட் அணி!

எல்லோரும் குதூகலப்படுகிறார்கள்; பாராட்டுகிறார்கள்; ாழ்த்துத் தெரிவிக்கிறார்கள். அந்த மகிழ்ச்சியில் நாமும் ங்குகொள்கிறோம்.

புத்தாண்டு பிறக்கின்ற இந்த தருணத்தில் - இந்த ந்தோஷத்தில், நாம் உணர்ந்துகொள்ள வேண் ய இன்னொரு செய்தியும் இருக்கிறது.

விளையாட்டில்கூட, தலிடம் பெறு தற்கான உழைப்பு ன்பது சுலபமல்ல; தொடர்பயிற்சியும், னைப்பும் வேண் ம். சோர்வில்லாத னம் வேண்டும். ருசுறுப்பும், முறை ான திட்டமிடு ும் வேண்டும். துணி ், தன்னம்பிக்கையும் பண்டும்.

இவை அனைத்தின் கூட்டு முயற்சிதான், வெற்றி, தனை என்றெல்லாம் பெயர் பெறுகின்றன.

வழக்கத்தைவிட முன்னதாக பொதுத்தேர்வுகள் வர நக்கின்ற நிலையில், உங்கள் மனங்களிலும் இந்த பிக்கை நாற்று தழைத்து வளரட்டும்!



அன்புடன்,

கோகூ



அவன் முடிக்கும் முன்பே, உள்ளேயிருந்து அவர் மனைவியின் குரல் கேட்டது:

"நல்லாக் கேளு...!"

"ஆமா, கேட்கறான்!" என்ற கந்தசாமி தொடர்ந்தார்.

"கரிக்காய் பொரியல்."

"என்னங்க இது. எனக்கும் முப்பத்தஞ்சு வயசாகுது. அப்படி ஒரு காயை நான் கேள்விப்பட்டதே இல்லை."

"இருக்குப்பா, கன்னிக்காய் தீயல்."

கரிக்கா

"நல்லாருக்கீங்களா?"

குரலைக் கேட்டதும் நிமிர்ந்து பார்த்தார் கந்தசாமி. ஜெயராஜ் நின்று கொண்டிருந்தான். அவருடைய நண்பர் குமாரசாமியின் மகன். வெளியூரில் வேலை பார்ப்பவன். மாதம் ஒருமுறை ஊருக்கு வருவான்.

"எப்படியிருக்க? சாப்பிடறியா?"

"சாப்பிட்டுத்தான் வரேன். நீங்க சாப்பிட்டீங்களா?"

"ம்... ஏதோ சாப்பிட்டேன்."

"என்ன ஒரு மாதிரி சொல்றீங்க? அம்மா சமையலுக்கு என்ன குறை?"

"தீயலா? துவையலை அப்படிச் சொல்றீங்களா?"

"பொறு. பரிக்காய் பச்சடி."

"இல்லை. நீங்க என்னைக் கேலி பண்றீங்க. பரிக்காய்னு எதுவுமே கிடையாது. பேரிக்காய்தான் இருக்கு. அதுல பச்சடி பண்ணமாட்டாங்க."

"பைக்காய் நெய்துவட்டல்."

"இல்லை. வேற என்னவோ இருக்கு அதைச் சொல்லாம, நீங்க புதிரா சொல்றீங்க. சொல்லுங்க."

"யப்பா, 'கரி'ன்னா யானை, அதுக்கு இன்னொரு பேரு அத்தி. அத்திக்கா

கரிக்காய் பொரித்தாள்; கன்னிக்காயைத் தீய்த்தாள்;
பரிக்காயை பச்சடியாய் பண்ணினாள் - உருக்கமுள்ள
அப்பைக்காய் நெய்துவட்டல் ஆக்கினாள்; அத்தைமகள்
உப்புக்காண் சீச்சீ உமி!

- காளமேகம்



பொரியல்; 'கன்னி'ன்னா வாழை. வாழைக்காயை அடுப்புல ரொம்ப நேரம் வெச்சதுல தீஞ்சு போயிடுச்சு. அதனால தீயல்; 'பரி'ன்னா குதிரை. அதுக்கு இன்னொரு பேரு 'மா', மாங்காய் பச்சடி; 'பைக்காய்'னா கத்திரி. கத்திரிக்காய் நெய்துவட்டல்.''

அவர் முடிக்குமுன், கேட்டான் ஜெயராஜ் :

''அம்மா இவ்வளவும் செஞ்சிருக்காங்க. அப்புறம் ஏன் சலிச்ச மாதிரி சொல்றீங்க?''

''செஞ்சிருக்கா, ஆனா, ருசி இல்லாம போயிருச்சே!''

''ஏன்.''

''அவ்வளவும் உப்பு!''

அவர் முடிக்கும்போதே, உள்ளேயிருந்து

பாரியல்?

சுகுணா

குரல் கேட்டது.

''தம்பி, 'பொண்டாட்டி சமையலை வெளில பாராட்டக்கூடாது'ன்னு அவங்கப்பா சொல்வாராம். அதனால இப்படிச் சொல்றாரு.''

அதைக் கேட்ட கந்தசாமி புன்னகை செய்தார்.

''அதானே? அம்மா சமையல்தான், தொப்பையாத் தெரியுதே.'' என்று கேலி செய்த ஜெயராஜ் கேட்டான் :

''என்ன திடீர்னு கரிக்காய் ஞாபகம்?''

''அதுவா, நாளைக்கு ஒரு சொற்பொழிவு. அதுக்காக மூளையைப் புரட்டிட்டிருக்கேன். இந்த ஞாபகம் வந்துச்சு. உன்கிட்ட சொன்னேன்.''

வியப்புடன் கேட்டான் ஜெயராஜ்.

''கற்பனைதானா இது?''

''ம்... கற்பனை பண்ணினவன் என்னை விடப் பெரிய குறும்புக்காரன். காளமேகம்னு பேரு!'' சொல்லிவிட்டு, கலகலவென்று நகைத்தார் கந்தசாமி. ●

கல்கி

கோகுலம்

பரதன் பப்ளிகேஷன்ஸ்
பிரைவேட் லிமிடெட்டிற்காக
பரதன் அச்சகத்தில்
அச்சிட்டு வெளியிடுபவர்:
லக்ஷ்மி நடராஜன்

ஆசிரியர் : சீதா ரவி
வடிவமைப்பு :
எஸ்.ஸ்டீஃபன், எம்.மோகன்,
பா.கோபால்

தொலைபேசி : 044 - 4343 8888
தொலைநகல் : 044 - 4343 8899

ஆசிரியர் குழு :
044 - 4343 8822
tamilgokulam@kalkiweekly.com

விளம்பரப் பிரிவு :
044 - 4343 8811
marketing@kalkiweekly.com

சந்தா பிரிவு :
044 - 4343 8833
subscription@kalkiweekly.com

விற்பனை பிரிவு :
044 - 4343 8844
sales@kalkiweekly.com


இன்டர்நெட் முகவரி :
www.kalkionline.com

இணையதளத்தில்...
வாங்கி, வாசித்து, மகிழ...
www.sangapalagai.com

சந்தா விவரம் (ஒரு வருடம்) :
உள்நாடு : ரூ.96/-
வெளிநாடு : ரூ.1000/-

கல்கி பில்டிங்க்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

குழந்தைகளின் குதூகலம்!



நளினி சம்பத்குமார்

இதுவும் நம்ம வேலைதான்!

'அந்த காலத்துல நாங்கள்லாம் எவ்வளவோ வேலை செஞ்சிருக்கோம். எங்கம்மாவுக்குக் காய் நறுக்கிக் கொடுப்போம், அப்பாவுக்கு, கடைக்குப் போய் எல்லா சாமானும் வாங்கிக்கிட்டு வருவோம். தாத்தா பாட்டி காலைப் பிடிச்சு விடுவோம், தோட்டத்துல இருக்குற செடிக்கு, கிணத்துலேர்ந்து தண்ணி இழுத்து கொட்டுவோம். ஆனா இந்தக் காலத்துப் பசங்களைப் பாருங்க. ஒரு வேலை கூட செய்ய மாட்டேங்கறாங்க. சரி, அம்மா அப்பாவுக்கு வேணா உதவி செய்ய வேண்டாம். அட்லீஸ்ட் அவங்க வேலையையாவது அவங்க பார்த்துக்கலாமே' - பல பெற்றோர்கள் தினம் இடும் புகார்ப் பட்டியல் இது.

இது சரிதானா என்பதை அறிய, பள்ளி மாணவ, மாணவிகள், பெற்றோர்கள், பேராசிரியை என கலந்து பேசினோம்.



திருமதி. அபர்ணா சுப்ரமணியம் (மும்பையைச் சேர்ந்தவர்) : இதற்கு முக்கியமான காரணம், பெற்றோர்களே தான். பள்ளிக்குச் சென்றுவிட்டு ஒரு மாணவனோ, மாணவியோ வீட்டிற்கு வந்த உடனேயே, ட்யூஷன், பாட்டு, டான்ஸ் என ஏகப்பட்ட வகுப்புக்களுக்கு அனுப்பி விடுகிறார்கள். மும்பை போன்ற பெரிய நகரங்களில், காய்கறி நறுக்கித் தருவதற்குக் கூட வேலைக்காரி வைத்துக் கொண்டுள்ளார்கள். 'என் மகன் அல்லது மகள் நன்றாகப் படித்தால் போதும். வீட்டு வேலை எல்லாம் செஞ்சு நேரத்தை வீணாக்க வேண்டாம்' என நினைக்கும் பெற்றோர்களின் மனப்போக்கால்தான், தற்காலக் குழந்தைகள் வீட்டு வேலைகளைச் செய்ய விரும்புவதில்லை.



* கே.எஸ். விஜயலக்ஷ்மி

திருமதி அனுராதா : பத்தாம் வகுப்பு படிக்கும் வரை படிப்பு, படிப்பு என படிப்பை மட்டுமே பார்த்துக் கொண்டிருக்கிறார்கள் தற்கால மாணவ, மாணவிகள். அதற்குப் பிறகு, பதினோராம் வகுப்பைத் தொடும்பொழுது, விளையாட வேண்டும் என்ற எண்ணம் வந்து விடுகிறது. நாம் 'இதைச் செய், அதைச் செய்' என்று சொன்னால், அவர்களுக்கு எரிச்சல்தான் வருகிறதே தவிர, 'அம்மா சொல்றாங்களே; நாம செய்வோம்'னு அவர்கள் ஒரு போதும் நினைப்பதில்லை. வீட்டு வேலைகளில் பெற்றோர்களுக்கு உதவி செய்ய வேண்டும் என்ற எண்ணம் இந்தக் கால பள்ளி/கல்லூரி மாணவ மாணவிகளிடம் அவ்வளவாக இருப்பதில்லை.



* ஐஸ்வர்யா



* அபர்ணா சுப்ரமணியம்




* ஹரிப்ரியா

ஹரிப்ரியா (மாணவி) : இது ஒரு மெஷின் உலகம், எல்லா வேலைகளையும் செய்ய இப்பவே ஏகப்பட்ட மெஷின்கள் வந்தாச்சு. எங்க காலத்துல இன்னும் நிறைய மெஷின்கள் வந்திடும். அதுக்காக நாங்க பெற்றோர்களுக்கு உதவி செய்ய மாட்டோம்னு சொல்ல வரலை. சூழ்நிலைக்கு ஏற்ப நாங்க நிச்சயமா

பெற்றோர்களுக்கு உதவி செய்வோம். மேல் படிப்புக்கு வெளிநாடு போனோம்னா, அங்க எல்லா வேலைகளையும் நாங்களேதான் செஞ்சுக்கணும். அதனால, இப்பலேர்ந்தே வீட்ல அப்பா, அம்மாவுக்கு வீட்டு வேலைல உதவி செய்யற பழக்கத்தை வளர்த்துக்கறது நல்லதுதான்.

அனிருத் (மாணவன்) : புராணக் கதைகள்ல எல்லா மாணவர்களுமே, குருகுலத்துல தங்கிப் படிச்சாங்கன்னு வரும். அதனால, அவங்க வேலைய அவங்கதான் பார்த்தாகணும். இன்னிக்கு அப்படி இல்லையே. நாம பெற்றோர்களுக்குன்னு தனியா உதவி செய்யறோமோ இல்லையோ, சின்னச் சின்ன வேலைகளை நாமே செய்யறது நல்லது. நாம் சாப்பிட்ட தட்டை நாமே தேய்த்து வைப்பது, நமது யூனிஃபார்ம்களை அயர்ன் செய்வது இப்படிச் செய்வது நமக்கும் நல்லது; பெற்றோர்களுக்கும் உதவி!


* அனிருத்


* அனுராதா

ஐஷ்வர்யா (மாணவி) : நான் ஃப்ளாட்டில் வாழ்வதால், எனது வேலைகளை நானே தான் செய்து கொள்வேன். ஷூக்களுக்கு பாலிஷ் போடுவது, வீட்டைப் பெருக்குவது, துடைப்பது இதையெல்லாம் ஒரு பொழுதுபோக்காகத்தான் பார்க்கிறேன். ஹாஸ்டலில் தங்கிப் படிக்க நேரும்பொழுது, 'ஒரு வேலையும் செய்யத் தெரியாவிட்டால், நாம் தானே திண்டாடுவோம்' என ஒரு நிமிஷம் நினைத்துப் பார்த்தால்போதும். 'இதுவும் நம்ம வேலைதான்'னு எல்லோருமே சின்னச் சின்ன வீட்டு வேலைகளைச் செய்ய ஆரம்பிச்சுடுவோம்.

திருமதி. கே.எஸ். விஜயலக்ஷ்மி : (பி.எஸ்.பி.பி. பள்ளிகளின் ஒருங்கிணைப்பாளர், நிர்வாகி) குழந்தைகளை மெல்ல மெல்ல வீட்டு வேலைகளைச் செய்ய பழக்கப்படுத்த வேண்டியது பெற்றொர்களின் கடமைதான். அதை வேலை என்றே சொல்லாமல், ஒரு நல்ல ஆக்டிவிட்டி போல செய்யச் சொன்னால், குழந்தைகள் சந்தோஷமாகச் செய்வார்கள். வீட்டைத் தூய்மைப்படுத்துதல், செடிகளுக்குத் தண்ணீர் விடுதல்... இப்படி சின்னச் சின்னதாக வேலை செய்ய சிறு வயது முதலே பழக்க வேண்டும். விடுமுறை நாட்களில், வீட்டு வேலைகளை ஒட்டு மொத்த குடும்பத்தினரும் சந்தோஷமாகப் பேசி சிரித்துக் கொண்டு செய்யலாம். இதனால் குழந்தைகளும் தங்கள் பொறுப்பை உணர முடியும்!

அட்டையில் : **ப்ரியா, சந்தோஷ்**

வண்ணப்படம் : **ஸ்ரீஹரி**

வாழ்த்துகள்!

கோகுலம் சிறுவர் சங்க உறுப்பினர்கள், கடந்த ஆண்டு ஏராளமான படைப்புகளை அனுப்பி அசத்தினார்கள். கதை, கவிதை, கட்டுரை, தகவல், எங்கள் ஊர், சுற்றுலா, கதம்பம், உங்கள் கைவண்ணம், சம்பவம்... என எல்லாப் பகுதிகளிலும் அவர்களே ஆதிக்கம் செய்தார்கள். அவ்வளவு அதிகமான படைப்புகளை அனுப்பிய அனைவருக்கும் எங்கள் பாராட்டுகள்; வாழ்த்துகள்!

சிறுவர் சங்க உறுப்பினர்களில், மிக அதிகமான படைப்புகளை அனுப்பி- கோகுலத்தில் இடம்பெற்ற, எட்டு பேருக்கு ரூ.1000/- மதிப்புள்ள புத்தகங்கள் பரிசாகப் பகிர்ந்து அனுப்பப்படுகின்றன.

பரிசு பெற்றோருக்கு மீண்டும் வாழ்த்துகள்.




எஸ்.தணிகைவேல்,
உ. எண் 762, காஞ்சிபுரம்



த. மணிமோகன், உ. எண் 892,
வெள்ளக்கோவில்



பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456, மதுரை




அதிபன் அன்புமணி,
உ. எண் 120, ஈரோடு



மு. அருண்குமார்,
உ. எண் 670, ஒசூர்



அனீஸ் ஃபாத்திமா,
உ. எண் 34, போடி



சு. அபிஷேக்,
உ. எண் 518, சென்னை



எஸ்.சுப்ரியா,
உ. எண் 79, சென்னை

கோபு பெரும் குழப்பத்தில் இருந்தான். அந்தச் செயல், அவனுடைய வாழ்க்கையைத் தலைகீழாகப் புரட்டிப் போட்டுவிடும் என்று தெரிந்தது அவனுக்கு. என்றாலும், 'அதுதான் சரி' என்றும் தோன்றியது. காகிதத்தை எடுத்து எழுத ஆரம்பிக்கும்போதே... மனம் பின்னோக்கி ஓடியது.

அன்று சனிக்கிழமை. சுற்றுலாவாக, சோலைவனம் காட்டுக்கு வந்திருந்தார்கள் அனைவரும். கோபுவின் அப்பா, அங்கு காட்டிலாகா அதிகாரியாக பணியாற்றி வந்தார். அதனால், அங்கு செல்லலாம் என்று தலைமையாசிரியர் முடிவு செய்திருந்தார்.

56 மாணவர்கள், ஐந்து ஆசிரியர்கள் கொண்ட அந்தக் குழு, காட்டிலேயே தங்கவும் ஏற்பாடு செய்திருந்தார் கோபுவின் அப்பா சந்தானம். அவர்களுக்கு காட்டின் பல்வேறு இடங்களைச் சுற்றிக் காட்டவும் ஆட்கள் வந்தனர்.

''இந்தச் செடிக்கு 'விஷத்தும் புலா'ன்னு பேரு. இது மேல பட்டா உடம்பு முழுக்க தடிப்பு தடிப்பா வரும். சிலருக்கு, மயக்கமே வந்துரும். இதைப் பாருங்க, இந்த மரத்தை 'கண்திருஷ்டி மரம்'னு சொல்லுவாங்க.

கமிஷனருக்கு



ஊர்ல நெல்லிக்காய் பச்சை நிறத்துல பாத்திருப்பீங்க. இதோ பாருங்க, சிவப்போடின நெல்லிக்காயை! மணத்தக்காளிப் பழம் மாதிரியே இருக்கு பாத்தீங்களா... இதுக்கு 'அச்சம் பழம்'னு பேரு. ரத்தத்துல சக்கரையை கட்டுப்படுத்தற குணம் இதுக்குண்டு.''

சொல்லிக்கொண்டே வந்தார் அந்த வனக்காவலர். காட்டின் வசீகரமான அழகைப் பார்த்தபடியே மாணவர்கள் அனைவரையும் பாதுகாப்பாக அழைத்துச் சென்றார்கள் ஆசிரியர்கள்.

சில உள்பகுதிகளில்,

உயரமான மரங்களில் பரண்கள் அமைக்கப்பட்டிருந்தன. 'அது எதுக்கு' என்ற கேள்வி எழும் முன்பே, ''ரோந்து வரும்போது திடீர்னு எதாவது ஆபத்து வந்தா, இதுல ஏறி உட்கார்ந்துக்குவோம். பாருங்க, பக்கத்துலயே நூலேணி தொங்குது'' என்றார் காவலர்.

அந்த மரம் சுமார் முப்பதடிக்கு மேல் உயரமாயிருந்தது. 'அதில் ஏறுவதற்குள் விலங்கு கிட்டே வந்து



ஒரு கடிதம்!

விட்டால்...?' என்று நினைத்து கவலை வந்தது மாணவர்களுக்கு.

சிலர் சுற்றுமுற்றும் பார்த்தார்கள். அதைக் கவனித்த காவலர், ''பயப்படாதீங்க. பகல்ல வராது. இப்ப மான், முயல், மிளா, வரையாடு, மாடு, நரி... இதுங்கதான் தென்படும். அபூர்வமா யானைங்க திரியும்.'' என்றபடியே அழைத்துச் சென்றார்.

நிஜம்தான். கீரி, உடும்பு, முயல்கள், மான்கூட்டம், காட்டுப்பன்றி, யானைகள்... என்று பார்த்து சந்தோஷப்பட்டார்கள். பாதுகாப்பான தூரத்தில் நின்றபடியே, கரடி, சிறுத்தை போன்றவற்றைக் கண்டார்கள்.

மூன்று நாட்கள் போனதே தெரியவில்லை. நாளைக்காலை ஊருக்குக் கிளம்ப வேண்டும்.

முந்தைய இரவு!

கோபு உற்சாகமாயிருந்தான். அவன் அப்பா செய்திருந்த ஏற்பாட்டையும், செய்து தந்த உதவிகளையும் பாராட்டிப் பேசிக்கொண்டிருந்தார் தலைமையாசிரியர். அப்போது அப்பாவின் செல்போன் ஒலித்தது. அதைக் கவனித்த அவர் எழுந்தார். சற்றுத் தள்ளிப் போய்ப் பேசினார்.

பேசி முடித்த தலைமையாசிரியர், திரும்பிப் பார்த்தார். அவன் அப்பா வரவில்லை. ''கோபு, உங்கப்பா பேசிட்டார்னா கூட்டிட்டு வா.''

கோபு எழுந்து போனான். அவன் அப்பா பேசிக்கொண்டிருந்த செய்தி, அவனைத் திடுக்கிட வைத்தது.



கே. பரத், பத்தாம் வகுப்பு,
ஸ்ரீ விஜய் வித்யாலயா மெட்ரிக்
மேல்நிலைப் பள்ளி, ஓசூர்

"ஆமா சார். நான் விருப்ப ஓய்வு வாங்கிட்டேன். அடுத்த வாரத்தோட என் பணி முடியுது..."

....

"நீங்க சொன்னபடியே கோடவுன்ல இருந்த சந்தன மரத்தை அனுப்பி வெச்சிட்றேன்."

மதியம் பூட்டியிருந்த கதவை ஒன்றை பார்த்ததும் அதைத் திறந்து பார்க்கக் கூடாது என்று தாங்கள் தடுக்கப்பட்டதும் கோபுவுக்கு ஞாபகம் வந்தன. பூட்டியிருந்த கதவின் மர்மம் ஒருவாறு புரியவர... அறிந்து அதிர்ந்தான் கோபு. 'தன்னுடைய அப்பாவா இப்படிச் செய்கிறார்?' மனம் நடுங்கியது.

....

"ஆமா சார். மனுஷனா வாழணும்னா காசுதான் வேணும். அதை விட்டுட்டு, தேசம் நியாயம்னு பேசிட்டிருந்தா பிச்சைதான் எடுக்கணும். நீங்க சொல்றதுதான் கரெக்ட்."

"பணத்தை வழக்கம்போல அந்த அக்கவுண்ட்லயே போட்ருங்க."

....

"அதெல்லாம் யாருக்கும் தெரியாது. என் பெண்டாட்டி உள்பட. தெரிஞ்சா கதை கெட்டுது. அவளே போலீசுக்குப் போயிடுவா. ஆமா, தியாகி மக!"

....

அப்பாவின் பேச்சைக்கேட்ட கோபுவுக்கு மனமும், புத்தியும் நடுங்கின. அவரைக் கூப்பிடாமலே வந்துவிட்டான். அதற்குப் பின் வேறு எதிலும் அவன் மனம் லயிக்கவில்லை.

டூர் முடிந்து வந்த பின்பு, அம்மாவிடம்கூட, சொல்லத் தோன்றவில்லை அவனுக்கு.

"கோபு, எனக்கு நீதான் உயிர். ஆனா, நாடு வேணுமா, நீ வேணுமா'ன்னு கேட்டா, நாடுதான்னு சொல்வேன். ஏன் தெரியுமா? நாடுங்கறது, வெறும் மண் இல்லை. நம்ம உறவுகள், நினைவுகள், நட்பு, சாப்பாடு, குடிச்ச தண்ணி... இத்தனையும் ஒண்ணாச் சேர்ந்தது. எல்லாத்தையும்விட அதுதான் பெரிசு."

காதுகளில் அம்மாவின் குரல் ஒலிப்பது போல் இருந்தது. படக்கென்று, மடை திறந்த மாதிரி கண்களிலிருந்து வழிந்தது கண்ணீர். புறங்கையால் அதைத் துடைத்தபடியே எழுத ஆரம்பித்தான்.

'மதிப்புக்குரிய போலீஸ் கமிஷனர் அவர்களுக்கு...'



பூட்டியிருந்த கதவின் மர்மத்தை அறிந்து அதிர்ந்தான் கோபு. 'தன்னுடைய அப்பாவா இப்படிச் செய்கிறார்?'

அழுகிய பழம்!

கதை : வே.செல்வகணேசன், ஆறுமுகநேரி
படம் : பிள்ளை



விருப்பம்!

உலகக் கோப்பை கால்பந்து இந்த வருடம் (2010) தென் ஆப்பிரிக்காவில் நடக்க உள்ளது. 2014 உலகக் கோப்பை பிரேஸிலில் நடக்கப்போகிறது. 2018 உலகக்கோப்பை இங்கிலாந்தில் நடக்கவேண்டும் என்று டேவிட் பெக்கம் கூறியுள்ளார். "எங்கள் உயிரணுக்களில் கால்பந்து கலந்துள்ளது. அதனால் மக்களிடம் அமோக வரவேற்பு கிடைக்கும். மேலும் உலகத் தரத்தில் கால்பந்து மைதானங்கள் ஏற்கெனவே இங்கிலாந்தில் உள்ளன" என்றும் அவர் தம் நாட்டின் சார்பாகப் பேசி ஆதரவு திரட்டி வருகிறார்.



அதிரடிதா(கா)ன்!

ச.ந.கண்ணன்

சாதனை!



சச்சினின் சாதனை மும்பையைச் சேர்ந்த 12 வயது சிறுவனால் முறியடிக்கப்பட்டுள்ளது. மும்பையின் Springfield Rizvi School பள்ளியைச் சேர்ந்த சர்ஃபெராஸ்கான் Indian Education Society Secondary School அணிக்கு எதிராக 439 ரன்கள் எடுத்து சச்சினின் நீண்டநாள் பள்ளிச் சாதனையைத் தாண்டியுள்ளார். 15 வயதுச் சிறுவனாக சச்சின் 346 ரன்கள் எடுத்ததே முந்தைய சாதனையாக இருந்தது. 'சச்சின்தான் என் கனவு நாயகன். இன்று அவரோடு என்னை இணைத்துப் பேசுவது எனக்குப் பெருமை' என்கிறார் அவர். அந்த ஆட்டத்தில் 56 ஃபோர்களும் 12 சிக்ஸர்களும் அடித்தார் சர்ஃபெராஸ்கான்.



அபராதம்!

நடுவரிடம் கோபமாகப் பேசி அவரை மிரட்டிய குற்றத்துக்காக டென்னிஸ் வீராங்கனை செரீனா வில்லியம்ஸுக்கு அபராதம் விதித்துள்ளது சர்வதேச டென்னிஸ் அமைப்பு. 87 லட்சம் அபராதம் செலுத்தினால் மட்டுமே அவர் தொடர்ந்து டென்னிஸ் விளையாடமுடியும். யு.எஸ் ஓபன் அரையிறுதி போட்டியில், மேட்ச் பாயிண்டின் போது செரினா வில்லியம்ஸ் நடுவரிடம் கோபமாகப் பேசியதோடு மட்டுமில்லாமல், அவரை, "கொன்றுவிடுவேன்!" என்றும் மிரட்டினார். இதனால் ஆட்டத்தில் செரினா தோற்றதாக அறிவிக்கப்பட்டது. 'இனிமேல் இதுபோலத் தவறுகள் செய்தால் அவர் கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் கலந்துகொள்ள தடை விதிக்கப்படும்' என்றும் எச்சரிக்கை விடுத்துள்ளது.





பெருமை!

இலங்கையை இரண்டுக்கு பூஜ்ஜியம் என்கிற விகிதத்தில் ஜெயித்ததால் இந்திய அணி டெஸ்ட் தரவரிசைப் பட்டியலில் முதலிடம் பிடித்துள்ளது. 2000க்குப் பிறகுதான் - அதாவது கங்குலி இந்தியாவின் கேப்டன் ஆனபிறகுதான், இந்திய அணி வெளிநாடுகளில் அதிகம் ஜெயிக்க ஆரம்பித்தது. தோனி இதுவரை கேப்டனாக இருந்த 10 டெஸ்டுகளிலும் தோற்கவில்லை என்பது ஒரு சாதனையாகும். 'என் வாழ்வின் மிகச்சிறந்த நாள்' என்று நெ.1 ரேங்கிங் பற்றி சச்சின் பெருமையாகக் குறிப்பிடுகிறார்.

இந்த வருடம் டெல்லியில் நடக்கவுள்ள காமன்வெல்த் போட்டியில், உலக சாதனை தடகள வீரர் உசைன் போல்ட் கலந்துகொள்வார் என்று முதலில் சொல்லப்பட்டது. ஆனால் இப்போது அதை மறுத்துள்ளார் போல்ட். "நான் இந்தியா வருவது குறித்து இன்னும் முடிவு செய்யவில்லை. அதை என் மேனேஜர்தான் தெரிவிப்பார்", என்கிறார் அவர். இதனால் காமன்வெல்த் போட்டி களையிழந்து போயிருக்கிறது.

மறுப்பு!



அஜீரணம் ஏன்?



அஜீரணம் என்பது அனைவருக்கும் உண்டாகின்ற ஒரு முக்கியமானவயிற்றுத்தொல்லை. நாம் சாப்பிடும் உணவு வாய், இரைப்பை, சிறுகுடல், பெருங்குடல் ஆகிய நான்கு இடங்களில் செரிமானமாகிறது. அதற்கு செரிமானப் பாதையில் உற்பத்தியாகின்ற நொதிகள் அடங்கிய செரிமான நீர்கள், ஹைட்ரோகுளோரிக் அமிலம், ஹார்மோன்கள் போன்றவை உதவுகின்றன.

அஜீரணம் என்பது என்ன?

சில நேரங்களில் செரிமானப் பாதையில் உண்டாகின்ற குறைபாடுகளால் அல்லது நோய்நிலைகளால், இந்தச் செரிமான நீர்கள் சுரப்பதில் தவறுகள் நேரலாம். அப்போது இயல்புநிலை மாறி, வேதிப்பணிகளில் மாறுபாடுகள் தோன்றும். இதன் விளைவாக செரிமானம் தடைபடும். இதையே 'அஜீரணம்' (indigestion) என்று அழைக்கிறோம்.

பொதுவான அறிகுறிகள்

அஜீரணத்தை அடையாளம் கண்டு

டாக்டர் கு. கணேசன்

கொள்வது எளிது. உணவு உண்டபின் வயிற்றில் ஏற்படும் சுகமின்மை, நெஞ்செரிச்சல், புளித்த ஏப்பம், குமட்டல், வாந்தி, வயிறு உப்புசம், வயிற்றில் இரைச்சல், பசிக்குறைவு, வாயு பிரிதல், பேதி அல்லது மலச்சிக்கல், வாயில் அதிகமாக உமிழ்நீர் சுரத்தல், வாய்நாற்றம் போன்றவை அஜீரணத்தின் அறிகுறிகள்.

பொதுவான காரணங்கள்

அதிக காரம், புளிப்பு, மசாலா நிறைந்த உணவுகளை அடிக்கடி சாப்பிட்டால் இரைப்பையின் சளிப்படலம் சிதைந்து, செரிமான நீர்கள் சுரப்பது தடைபடும். இது அஜீரணத்திற்கு வழி அமைக்கும். சிலருக்குச் சில உணவுப்



பொருள்களால் - குறிப்பாக அளவுக்கு மீறிய ஊறுகாய், மிளகாய், வற்றல் போன்றவற்றைச் சாப்பிடுபவர்களுக்கு, அஜீரணம் உண்டாகும். விருந்து மற்றும் விழாக்கால நேரங்களில் அளவுக்கு அதிகமாக உணவு உண்பதால் அஜீரணம் ஏற்படும்.

எண்ணெயில் வறுத்த மீன், இறைச்சி போன்ற அசைவ உணவுகள் மற்றும் அப்பளம், வடை, இனிப்புப் பண்டங்கள், நெய், வெண்ணெய், டால்டா போன்றவற்றை அதிகமாக உண்டால், இரைப்பையில் எண்ணெய் மட்டும் தனியாகப் பிரிந்து இரைப்பையின் மேற்பரப்பில் மிதக்கும். இதன் விளைவாக செரிமான நீர்கள் இரைப்பையில் இயல்பாகச் சுரப்பது தடைபடும். இது அஜீரணத்தை வரவேற்கும்.

அதிக அளவு காபி, தேநீர் சாப்பிடுதல், புகைபிடித்தல், மது அருந்துதல், வெற்றிலை போடுதல், பான்மசாலா பயன்படுத்துதல், விரைவு உணவுகளை (Fast Food) அடிக்கடி உண்ணுதல், காற்றடைத்த மென்பானங்களை அளவின்றிக் குடித்தல் போன்றவையும் அஜீரணம் ஏற்படக் காரணமாகலாம்.

நச்சுணவு

தெருக்களில் தள்ளு வண்டிகளில் விற்கப்படும் ஈக்கள் மொய்க்கும் பண்டங்கள், காய்கறிகள், பழங்கள் மற்றும் உணவுப்பொருள்களை உபயோகிப்பதற்கு முன்பு நன்றாகச் சுத்தம் செய்யத் தவறினால், அவற்றின் மூலம் நோய்க்கிருமிகள் குடலுக்குள் நுழைந்து நோய்த்தொற்றை உண்டாக்கும். அப்போது நோயின் துவக்க அறிகுறியாக அஜீரணம் தலைகாட்டும். மாசுபட்ட குடிநீரை பயன்படுத்துவது, அசுத்தமான சமையலறையில்



6 வழி!

• சுகாதாரமாக தயாரிக்கப்பட்ட சத்துள்ள உணவுகளை அளவோடும் நேரத்தோடும் உட்கொள்ளுங்கள்.

• அதிக காரம், புளிப்பு, மசாலா நிறைந்த உணவுகளைக் குறைத்து, மோர், இளநீர், பழச்சாறுகள், காய்கறி சூப் போன்றவற்றைச் சாப்பிடப் பழகுங்கள்.

• ஆவியில் வேகவைத்த உணவுகளை அதிகமாகச் சேர்த்துக் கொள்ளுங்கள். எண்ணெயில் பொறித்த உணவுகளைக் குறைத்துக் கொள்ளுங்கள்.

• நார்ச்சத்து மிகுந்த காய்கறிகள், பழங்களை தினமும் சாப்பிடுங்கள்.

• இரவில் தினமும் இரண்டு வாழைப்பழங்களை உண்ணுங்கள்.

• காலையில் எழுந்ததும் ஏதேனும் உடற்பயிற்சி செய்யும் பழக்கம் அவசியம்.

சமைப்பது, கைவிரல் நகங்களில் அழுக்குடன் சமைப்பது, சுகாதாரம் குறைந்த உணவு விடுதிகளில் தொடர்ந்து சாப்பிடுவது போன்றவற்றால் செரிமானப்பாதையில் நோய்த்தொற்று ஏற்பட்டு அஜீரணம் தோன்றும். பால் புட்டியைச் சரியாக சுத்தம் செய்யாமல் பால் புகட்டினால், குழந்தைக்கு அஜீரணம் ஏற்படும்.

கலப்பட எண்ணெய் மற்றும் கலப்பட உணவுப்பொருள்களைப் பயன்படுத்தினாலும், சரியாக வேகாத உணவை சாப்பிட்டாலும் அஜீரணம் ஏற்படும்.

கலப்பட உணவுகள்

தெரிந்தோ தெரியாமலோ உணவு தயாரிக்கும்போது கலப்பட எண்ணெய் மற்றும் கலப்பட உணவுப்பொருள்களைப் பயன்படுத்தினாலும், உணவை சரியான அளவில் வேகவைத்துச் சமைக்காவிட்டாலும், அஜீரணம் ஏற்படும். குழந்தைகள் தங்கள் வயதுக்கு மீறி சத்து மிகுந்த உணவைச் சாப்பிடுவதும், வயதுக்குத் தேவையான சத்து இல்லாத உணவு சாப்பிடுவதும், குறிப்பாக நார்ச்சத்து குறைந்த உணவுகளைச் சாப்பிடுவதும் அஜீரணத்திற்கு வழி வகுக்கும்.

உடல் கோளாறுகள்

தவிர, உடலில் உள்ள சில குறைபாடுகளின் ஆரம்ப அறிகுறியாகவும் அஜீரணம் ஏற்படும். உணவுக்குழாய் அழற்சி, இரைப்பைப்புண், குடல்புழுக்கள், அமீபா மற்றும் கியார்டியா தொற்றுகள், மஞ்சள் காமாலை, பித்தப்பைக் கோளாறுகள், ரத்தசோகை போன்றவை இதற்குச் சில உதாரணங்கள். ●



வாழ்த்துகள்!

விடையைச் சொல்; பரிசை வெல் - 29ல் கலந்து கொண்டு சரியான விடைகளை நூற்றுக்கணக்கானோர் அனுப்பி இருந்தனர். ஆகவே, பரிசுத் தொகையான ஆயிரம் ரூபாயை குலுக்கல் மூலம் பத்து பேருக்கு, தலா ரூ.100/- வீதம் வழங்குகிறோம்.

சரியான விடைகள் :

1) டெய்கோனாட், 2) அடினோவைரஸ், 3) விரா, 4) ஜெர்மனி, 5) 324 மீட்டர்

பரிசு பெறுவோர் :

1.ஆர்.ஆசிக் அகமது, கம்பம், 2.பி.அபிஷேக், தஞ்சாவூர், 3.எஸ்.ஹரிஷ், திருச்சி, 4.கி.அகிலா, வேலூர், 5.ரி.சு.ரீகன் பென்கர், சென்னை, 6.வி.சரவணகுமார், பெங்களூர், 7.ஏ.நாராயணன், சேலம், 8.ஆர்.தஸ்மிலா, புதுகை, 9.ஜி.லலிக், ராஜபாளையம், 10.ஜி.கீர்த்தனா, திருத்தங்கல்.

தேடிவரும் கோகுலம்; படிக்கப் படிக்க...



பெயர் : ....

முகவரி : ....

....

....

ஒரு வருட சந்தா ரூ. 96/-. இதை டிமாண்ட் டிராஃப்ட் அல்லது மணியார்டராக அனுப்புங்கள். இந்தத் தொகை 'Gokulam Tamil' என்ற பெயருக்கு இருக்க வேண்டும். உள்ளூர் காசோலைகள் மட்டுமே ஏற்கப்படும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

சர்குலேஷன் மானேஜர், கோகுலம் (தமிழ்), கல்கி பில்டிங்ஸ்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 600 032.

புதிய ஆண்டு வருக
புகழனைத்தும் தருக.
இதயம் வாழ்த்த வருக
இனிமை நிலவ வருக

பரிதி தன்னைப் போற்றும்
பொங்கல் வருது; பின்னே
அரிய குறளைச் சொன்ன
அய்யன் நாளும் வருது!

புத்தாண்டே வருக!



மக்களாட்சி என்னும்
மகிமை தந்த நாளும்
பக்கமாக வருது;
பரவசங்கள் தருது!

சிக்கலற்ற எண்ணம்
சிந்தைகொண்ட வண்ணம்
மக்கள் வாழ்வு ஒளிர
மலரும் புதிய ஆண்டே!

வருக இன்பம் ஏந்தி!
வருக நன்மை கூடி!
வருக தீபம் ஏற்றி!
வளங்கள் பொங்க வருக!

- கு.காளிமுத்து, வல்லம்


பங்கு தருவேன்!



பட்டுப் போன்ற இறகுடன்
பழுப்பு நிறக் காலுடன்,
சிட்டுக் குருவிச் சிறகுபோல்,
சிலுசி லுக்கும் குஞ்சுகள்!

மொத்தமாகக் கூண்டிலே
முணுமுணுக்கும் கோழியே!
பருந்தின் பார்வை பட்டிடாமல்
பத்துக் குஞ்சும் காக்கிறாய்!

ம.இளங்கீரன்,
மாச்சம்பாளையம்



படித்திடு!

படிக்க உரிய பருவம் தன்னில்
பாரம் சுமக்க லாகுமா? - பள்ளிப்
படிப்பை விலக்கி வேலைக் கனுப்பும்
பெற்றோர் செயல் நியாயமா?

ஏட்டுக் கல்வி கற்றிடாமல்
ஏற்றம் ஏதும் தோன்றுமோ? - இந்த
நாட்டைக் காக்கப் போகும் விழுது
நலிவு காணல் நன்மையோ?

குழந்தை உழைப்பில் வாழும் வாழ்க்கை
குடும்பந் தன்னில் நல்லதா? - அந்த
மழலைப் பருவம் மகிழ்ச்சியின்றி
மடிந்து போகச் செய்வதா?

மலர்கள் மீது மலையை வைத்தால்
மலர்கள் என்னவாகிடும்? - அதன்
நலத்தில் குறைகள் நடந்து விட்டால்
நல்ல வாழ்வு மாறிடும்.

உயர்வு நாட
மழலைகட்கு
உரிய கல்வி தருகுவீர் - தேச
உயர்வு இந்த
பிஞ்சின் கையில்
என்று நெஞ்சம் அறிகுவீர்.

காலம் தன்னை வெற்றிகொள்ள
கல்வியே நல்கருவியாம் - இந்த
ஞாலம் வெல்ல வந்த பிள்ளை -
நாளும் கற்றல் உரிமையாம்!

- ஆறு. கதிரவன், பாதரக்குடி



பொத்திப் பொத்திக் குஞ்சினைப்
போற்றிக் காக்கும் கோழியே!
சத்துக்கான முட்டையும்,
சந்தோஷமாய்த் தருவையா?

எங்கள் வீட்டுக் கொல்லையில்,
இரையைத் தின்ன ஓடிவா!
பங்கு தருவேன் சோற்றிலே,
பசியை ஆற்றிக் கொள்ளுவாய்!

கொத்தித் தின்னும் அலகினால்,
குப்பை கிளறும் கோழியே!
எத்தித் திருடும் காக்கையாய்
இருக்கமாட்டாய், வாழி நீ!

சந்தோஷம் எது?

கதை: தஸ்மிலா
படம்: பிள்ளை





‘சந்தோஷம் எது?’ போட்டி – 71ம் பக்கம் பார்க்க.

ஏழு அடி, எட்டு அடி நீள முதலைகளை நாம் முதலைப் பண்ணைகளில் பார்த்திருப்போம். ஆனால், உப்புத் தண்ணீர் முதலைதான் இன்றைய ஊர்வன இனத்தில் மிகப் பெரிய விலங்கு. பொதுவாக இவை 13 அடி நீளம் காணப்பட்டாலும், 1957 ஆம் ஆண்டு பிடிபட்ட பிரமாண்டமான முதலை 28 அடி நீளமும் இரண்டு டன் எடையும் கொண்டிருந்தது.

- டி.எம்.சுதர்சன்,
பத்தாம் வகுப்பு,
புனித அந்தோணியார் பள்ளி,
திருச்செங்கோடு

மெதுவாக ஊர்ந்தாலும், தன் பின்னால் வரும் புழுக்களையும் வேட்டையாட


* 'டிரைவர்ஸ்' எறும்பு

யானையை

'கோன்' நத்தை

பார்ப்பதற்கு ஐஸ் கிரீம் கோன் போன்று காட்சி தரும் இந்த நத்தை,


* கடல் கிளி

வல்லது. இதன் நாக்கின் நுனியில் ஊசி போன்ற கூர்மையான பல் உள்ளது. இதை 'நெடுலா' என்று அழைப்பர். இந்த நெடுலாவிலுள்ள விஷம், மனிதனைக்கூட கொல்லும் சக்தி உடையது.

சிறிய கடல் புழுக்கள் மற்றும் மீன்களைப் பார்த்தால், அவை தன் அருகே வரும் வரை காத்துக் கொண்டிருக்கும். அருகே வந்ததும், நீண்ட பல்லால் விஷத்தை அவற்றின் உடலில் பாய்ச்சி உணவாக்கிக் கொள்ளும்.

கோன் நத்தைகள் பவளப் பாறைகளிலும், வடக்கு ஆஸ்திரேலியாவின் கடற்கரை ஓரங்களிலும் அதிக அளவில் காணப்படுகின்றன.

- எஸ்.சுப்ரியா, உ. எண் 79,
சென்னை

தகவல்



* உப்பு நீர் முதலை

மிரட்டும் எறும்பு!

கடல் கிளிகள்!

பஃபின்ஸ் என்பது அலாஸ்காவில் வசிக்கும் ஒருவகை கடற்பறவை. மாலுமிகளால், இவை கடல் கிளிகள் என அழைக்கப்படுகின்றன. இவற்றின் அலகு கிளியினுடையது போன்று அமைந்திருப்பதால் இந்தப் பெயர் ஏற்பட்டது. இவற்றுக்கு மீன்கள் என்றால் உயிர். இவை சுமாராகத்தான் பறக்கும்.

ஒரு குச்சி நுனியில், சின்ன வலை வைத்துக் காத்திருந்து, இவை பறக்கும் பாதையில் காட்டினால் போதும். சட்டென்று வலையில் சிக்கிக் கொள்ளும். ஏனெனில் இந்த பஃபின்ஸுக்கு உடனுக்குடன் திசைமாறத் தெரியாது. அதனால் இப்பறவைகளைப் பிடிப்பது மிகவும் சுலபம். கடல் பயணம் மேற்கொள்பவர்கள் உணவுக்காக இந்தப் பறவையைப் பிடிப்பார்கள்.

- த.பிரகல்யா, உ. எண் 318, பத்தாம் வகுப்பு, பொன்னையா இராமஜெயம் பொதுப் பள்ளி, தஞ்சாவூர்

* 'கோன்' நத்தை



யானையை பயமுறுத்தும் எறும்பு!

நமக்குத் தெரிந்தவை நெருப்பெறும்பு, கட்டெறும்பு, பிள்ளையார் எறும்பு போன்றவை தான். ஆனால், ஆப்பிரிக்கக் காடுகளில் வாழும் 'டிரைவர்ஸ்' எனப்படும் எறும்புகள் பயங்கரமானவை.

இவற்றுக்குப் பசியெடுத்தால், கூட்டமாகப் படையெடுத்துச் சென்று, ஒரு யானையைக் கூட மூன்றே நாட்களில் தின்று தீர்த்துவிடும்! எனவே, இந்த எறும்புக் கூட்டத்தைக் கண்டால், யானை பயந்து ஓடி நீருக்குள்ளோ, சேற்றுக்குள்ளோ ஒளிந்து கொள்ளும்.

- ந.பிருந்தா, உ. எண் 1098, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

சிரிப்பலை

ஆல் இன் ஆல் சுனில்!



ஜி.பிரபாகரன்.
உ.எண்: 961.
காஞ்சிபுரம்.



கோகுலம் டைஜஸ்ட்

இந்த டைஜஸ்டில்...



எதிரொலி உண்டாவது ஏன்?



சில இடங்களில் நாம் உரக்கப் பேசினால் எதிரொலி உண்டாகிறது. புதிதாகக் கட்டிய, காலியாக உள்ள வீடுகள், பெரிய பாறை, உயர்ந்த சுற்றுச் சுவர் போன்றவற்றில் நாம் எழுப்பும் ஒலி மோதித் திரும்பி வரும். அந்த ஒலி அலைகளையே நாம் எதிரொலி என்று அழைக்கிறோம். இந்த எதிரொலி உண்டாக வேண்டுமானால், நமக்கும், ஒலியைத் தடை செய்யும் பாறை அல்லது சுவர் போன்றவற்றுக்கும் இடையே, குறைந்தது 20 மீட்டர் தூரம் இருப்பது அவசியம். இந்த ஒலி நமது காதுகளில் ஒரு வினாடிதான் நிலைத்து இருக்கும். இந்த நேரத்துக்குள் வேறு எந்த ஒலி வந்தாலும் காதுகள் உணர்வதில்லை. ஆகவே எதிரொலிக்கும் பொருள்கள் இந்த தூரத்துக்கு (20 மீட்டர்) அப்பால் இருந்தால்தான், நம் ஒலி அவற்றை அடைந்து மீண்டும் திரும்பி வரும்போது நமக்குக் கேட்கும்.

- சு.அபிஷேக், உ. எண் 518,
சென்னை



மின்னுவது ஏன்?

பூனை உள்ளிட்ட சில விலங்குகளின் கண்களில், 'குவினைன்' படிகங்களால் ஆன 'ஒளி எதிரொளிப்பு ஏடு' உள்ளது. இது விழித்திரைக்கு பின்னால் உள்ளது. இந்த எதிரொளிப்பு ஏடு 'டஃபீட்டம்' எனப்படும். இந்த ஏடு, ஒளியினை மீண்டும் விழித்திரைக்கு எதிரொளித்து பார்வையை மேம்படச் செய்கிறது. இரவில் தன்னுடைய இரையைத் தேடும் விலங்குகளுக்கு உதவும் வகையில் இயற்கை அளித்துள்ள கொடை இது. இதனால்தான் பூனை, புலி... உள்ளிட்ட விலங்குகளின் கண்கள் இரவில் மின்னுகின்றன.

- மு.வைஷ்ணவி,
உ. எண் 215, வெள்ளமடம்





கடல் ஏன் வற்றுவதில்லை?

ஏரிகள், குளங்கள் போன்ற நீர் நிலைகள் கோடை காலத்தில் வற்றிப் போய்விடுகின்றன. அதற்குக் காரணம் தண்ணீர் ஆவியாகி விடுவதுதான். இதைப்போல் கடல் நீரும் ஆவியாகிப் போய்க் கொண்டுதான் இருக்கின்றது. ஆனால், குளம், ஏரி ஆகியவற்றுடன் ஒப்பிடும் போது, கடல் ஒரு மிகப் பெரிய நீர்ப் பரப்பு. கடல் பரப்பிலிருந்து பல லட்சக் கணக்கான கன மீட்டர் தண்ணீர் ஆண்டுதோறும் ஆவியாகி வளிக் கோளத்தில் கலந்து கொண்டிருக்கிறது. இது மேகமாகத் திரண்டு மழையாக மாறி நிலத்தில் பொழிகிறது. மழைநீர் ஆறுகள், கால்வாய்கள் வழியாக மீண்டும் கடலை அடைகிறது. இந்த நிகழ்ச்சி தொடர்ந்து நடைபெறுவதால், கடல் நீர் வற்றுவதில்லை. தவிர, தண்ணீர் ஆவியாவதன் மூலம் எந்த அளவு இழப்பு ஏற்படுகிறதோ, அந்த அளவுக்கு பனி உருகிய தண்ணீரும், மழை நீரும் பல வழிகளில் கடலில் வந்து சேர்ந்து விடுகின்றன. இதனால் கடல் வற்றுவதில்லை.

– எஸ்.வினீத் மாதவன், உ. எண் 1196, மதுரை



கற்பனைக்கு வேலை

இங்குள்ள படத்துக்கு வண்ணம் தீட்டி மகிழுங்கள்



வண்ணம் தீட்டுங்கள்!




1. 1822ஆம் ஆண்டு ஃபிரான்சில் பிறந்தவர் இவர்.
2. இவர் படித்து பட்டம் பெற்றது படிகவியல் துறையில்!
3. பொருட்கள் கெட்டுப் போவதன் காரணம், காற்றில் வாழும் கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிர்களே என்பது இவர் கண்டுபிடிப்பு.
4. திரவ உணவுப் பொருட்களை பாதுகாக்கும் முறையும் இவர் கண்டுபிடிப்புதான். (பால் கவர்கள் மீது பாருங்கள்!)
5. மருத்துவ உபகரணங்களை உபயோகிக்கும் முன், வெந்நீரில் போட்டு 'ஸ்டெரிலைஸ்' செய்ய வேண்டும் என்ற கட்டாயம், இவர் கண்டுபிடிப்பின் விளைவே.
6. வெறி நாய்க்கடிக்கான தடுப்பூசியைக் கண்டுபிடித்தவர் இவர்தான்.
7. 46 வயதில், இவருக்கு இடது கையும், இடது காலும் செயலிழந்தன.
8. இவரது கண்டுபிடிப்புகள் மருத்துவத் துறை சார்ந்தவர்களையே ஆச்சர்யப்பட வைத்தன.
9. அம்மைத் தடுப்பூசி பற்றிய எட்வர்ட் ஜென்னரின் ஆராய்ச்சி முறை இவரைப் பின்பற்றியது.
10. ஃபிரான்ஸ் நாட்டில், இவர் பெயரில் ஓர் ஆராய்ச்சி நிலையம் மற்றும் பல்கலைக் கழகம் ஆகியவை இயங்கி வருகின்றன.

இவர் யார்?

- ஜி.எஸ். சபரி, பன்னிரண்டாம் வகுப்பு, அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோபி

தூய்மை திலகம்!



மலர்களின் தேவதை!

சரோஜா ஆறாம் வகுப்பு படிக்கும், அழகான சுட்டிப் பெண். மண் பொம்மைகள் செய்வது, செடி, கொடி, மரங்கள் வளர்ப்பது அவளுக்குப் பிடிக்கும். எல்லோருக்கும் அவளை மிகவும் பிடிக்கும்! ஆனால் படிப்பில் அவள் சுமார்தான்.

அவள் கவனம் படிப்பைத் தவிர பிறவற்றிலேயே அதிகமிருந்தது. அதிலும் புதுப்புது பூச்செடிகள் வளர்ப்பதில் அதிக ஆர்வம். அன்றும் அப்படித்தான். அப்பா ஒரு வெள்ளை ரோஜா வாங்கிக் கொடுத்திருந்தார். அதன் ஒவ்வொரு பாகத்தையும் பார்த்து ரசித்துக் கொண்டிருந்தாள் சரோஜா.

அந்த நேரத்தில் அம்மா, அப்பாவிடம் மகளின் படிப்பைப் பற்றி குறைபட்டுக் கொண்டிருந்தாள். அப்பாவோ 'படிப்பை அவளாகவே ரசித்து சந்தோஷமாகப் படிக்கணும். நாம் இதைத் திணிக்கக் கூடாது. அப்புறம், அது வெறுப்பாயிடும்' என்று கூறிவிட்டார். இருப்பினும் அம்மா கண்கலங்கினாள்.

இதை சன்னல் வழியாகப் பார்த்த சரோஜா மனம் வாடினாள். 'படிப்பில் ஏன் கவனமில்லாமல் இருக்கிறாய்? அம்மா கண்கலங்கும் அளவுக்கு நடந்து கொள்வது தவறல்லவா?' என்று மனமே அவளைச் சுட்டது.



அதைத் தாங்க முடியாத சரோஜா, அங்கிருந்த செண்பக மரத்தடியில் அமர்ந்தாள். அவள் கண்களும் கலங்கின. அப்போது, அந்த செண்பக மரம் சிணுங்கியது. மலர்கள் எங்கும் கொட்டின. சரோஜா அண்ணாந்து பார்த்தாள், மரத்தின் உச்சியில் ஓர் அதிசயம்!

மரத்தின் பச்சை இலைகளுக்கும், மஞ்சள் மலர்களுக்கும் நடுவே வெள்ளாடை உடுத்திய ஓர் அழகான சின்னப் பெண் அமர்ந்திருந்தாள். அவளைச் சுற்றி அழகிய ஒளிவட்டம் தெரிந்தது. அவளது கையில் அழகிய தாமரைப் பூ வைத்திருந்தாள். அவள் சரோஜாவை 'வா' என அழைத்தாள். சரோஜாவும் தன்னை மறந்து மரத்தில் ஏறினாள். அவளருகே சென்று, "நீ யார்?" என்றாள்.

அப்போது அவர்கள் மரத்தின் உச்சிக் கிளையைத் தொட்டிருந்தனர்.

அ.வி. அஜிதா பாரதி.
உ.எண்: 733, கள்ளக்குறிச்சி.






''நான்தான் 'எஸ்கான்' - மலர்களின் தேவதை. எங்கள்மீது மிகுந்த அன்பு காட்டிய நீ, கண்ணீர் சிந்த விடுவோமா? என்னுடன் வா'' என்று சரோஜாவின் கையைப் பற்றிக்கொண்டு வானில் பறந்தது அந்த தேவதை!

வெகுதூரம் பறந்த அவர்கள், மலர்களால் ஆன பெரிய கதவை அடைந்தனர். அருகே சென்றதும், அந்தக் கதவு தானாகவே திறந்து கொண்டது.

உள்ளே நுழைந்த சரோஜா பிரமித்தாள். அது மிகப் பெரிய மலர்த் தோட்டம்!



இதுவரை கண்டிராத பல புதிய மலர்களை, சரோஜா அங்கு பார்த்தாள்.

''இதில் உனக்கு மிகவும் பிடித்த ஒரு மலரை எடுத்துக்கொள்'' என்றது தேவதை.

சரோஜா வெகுநேரம் திரும்பித் திரும்பிப் பார்த்துட்டு, குளத்தோரமாய் மலர்ந்திருந்த தாமரை மலரை எடுத்துக் கொண்டு வந்தாள்.

தேவதை ஆச்சர்யத்துடன், ''இத்தனை அழகான மலர்களில், நீ தாமரை மலரை விரும்பக் காரணம் என்ன?'' என்று கேட்டது.

''நீர்மட்டத்துக்கு மேலே எழும்பி நின்றது தாமரை. அது தன்னம்பிக்கை. சில இதழ்கள் அதன் மொட்டை சுற்றி மூடியிருந்தன. அது நாணம் போலத் தோன்றியது. தன்னம்பிக்கையும், பாராட்டுக்கு நாணுதலும் நற்பண்புகள்; அதனாலேயே தாமரையை விரும்பினேன்'' என்றாள் சரோஜா.


''அந்த மலரில் உள்ள தேனை ருசித்துப் பார்,'' என்று சிரித்தபடியே கூறிய தேவதை மறைந்தது.

சரோஜாவுக்கு ஒன்றும் புரியவில்லை. தேனை ருசித்தாள். அவ்வளவுதான்...

திடுக்கிட்டு விழித்தாள் சரோஜா. தன் வீட்டு செண்பக மரத்தடியில் படுத்திருந்தாள். சுற்றிலும் செண்பக மலர்கள் விழுந்திருந்தன. தேவதையையும் காணவில்லை; தாமரை மலரையும் காணவில்லை.

இது நிஜமா, கனவா என்று புரியவில்லை அவளுக்கு. ஆனால், இப்போது நன்றாகப் படிக்கிறாள். வகுப்பில் முதல் மாணவி அவள்தான். அவள் அம்மாவின் முகமும் மலர்ந்திருக்கிறது. தோட்டத்து மலர்களைப் போலவே!

ஜி.எஸ்.மோன்,
ஒன்பதாம் வகுப்பு,
ஸ்ரீராமகிருஷ்ண
வித்யாலய குருகுலம்,
உளுந்தூர்பேட்டை




எம்.ஆர்த்தி, எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி



உங்கள்

எஸ்.நந்தினி, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி, செஞ்சி







எஸ்.மதியழகி,
எட்டாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி



கைவண்ணம்!

சு.சரண்யா, எட்டாம் வகுப்பு,
குமுதா உயர்நிலைப் பள்ளி,
நம்பியூர்



இ.ரஞ்சிதா, ஏழாம் வகுப்பு,
சாரதா மெட்ரிகுலேஷன் பள்ளி,
செஞ்சி

ஒருமுறை அரிஸ்டாட்டில், தம் மாணவர்களிடம் ஒரு கேள்வி எழுப்பினார். அப்போது அலெக்சாண்டரும் அவரது மாணவர்.

"நீங்கள் மன்னராக இருக்கும் பட்சத்தில், உங்கள் நாட்டில் குழப்பம் ஏற்பட்டால் என்ன செய்வீர்கள்?"

முதலில் ஒரு மாணவன் சொன்னான். "உடனே அமைச்சரவையைக் கூட்டி, அவர்களின் ஆலோசனையைக் கேட்டு நடப்பேன்."

சூழ்நிலைக்கேற்ற முடிவு!



"என் முன்னோர்களின் வழிமுறையை அறிந்து நடப்பேன்," என்றான் அடுத்தவன்.

அடுத்து அலெக்சாண்டர் சொன்னார் :

"சூழ்நிலைக்கு ஏற்றபடி என் முடிவு அமையும்!"

அதைக் கேட்ட அரிஸ்டாட்டில் 'சபாஷ்' என்றார். சுய சிந்தனையுள்ள இந்த முடிவுதான், அலெக்சாண்டர் பெரும் வெற்றிகளைக் குவிக்கக் காரணமானது.

- ஜி.எஸ்.சபரி, பன்னிரண்டாம் வகுப்பு,
அரசினர் மேல்நிலைப் பள்ளி, கோபி

கடவுளாய் மாறு!

யோகி ஒருவர் விவேகானந்தரிடம் வந்து, "ஐயா! எனக்கு ஆகாயத்தில் பறக்கும் சக்தி இருக்கிறது. பூமிக்கு கீழ் நீண்ட நேரம் மூச்சை அடக்கும் சக்தி இருக்கிறது. தண்ணீருக்குள் அதிக நேரம் மூழ்கியிருக்கும் ஆற்றலும் இருக்கிறது. இவை பெருமைக்குரிய விஷயங்கள் தாமே!" என்றார்.


அவரது குரலில் வெளிப்பட்ட அகந்தையைக் கவனித்தார் விவேகானந்தர். அமைதி தவழும் கண்களால் அவரைப் பார்த்து, "ஐயனே! பார்... பறவைகள் ஆகாயத்தில் பறக்கின்றன. விஷ ஜந்துக்கள், புழுக்கள் போன்றவை பூமியினடியில் நீண்ட காலம் வாழ்கின்றன. மீன்கள் தண்ணீருக்குள்ளேயே பிறந்து, வளர்ந்து, தண்ணீரிலேயே மடிகின்றன.



இவையெல்லாம் எனக்கும் சாத்தியம் என்கிறாய். அப்படிப்பட்ட அற்ப ஜந்துக்களைப் போல் இருப்பதால், உனக்கு என்ன பயன்? கடவுளைப் போல் நடக்க, கருணை போன்ற நற்குணங்களை விருத்தி செய். கோபத்தையும், கர்வத்தையும் விலக்கு!''

விவேகானந்தரின் சொற்களைக் கேட்ட அந்த யோகி வெட்கித் தலைகுனிந்தார்.

- ஆ.பிரேம்குமார்,
உ. எண் 422,
பன்னிரண்டாம் வகுப்பு,
அரசு மேல்நிலைப் பள்ளி,
முஞ்சிறை



இந்த வசதி போதும்!



மகாத்மா காந்தி ஒருமுறை ரயிலில் பயணம் செய்தார். வழக்கம் போல மூன்றாம் வகுப்பில் பயணம்!

அப்போது பெரு மழை பெய்ய ஆரம்பித்தது. காந்தி அமர்ந்திருந்த கோச் முழுவதும் தண்ணீர் ஒழுகி, தேங்கி நின்றது.


வண்டி அடுத்த ஸ்டேஷனில் நின்றபோது, நிலைய அதிகாரி காந்தியிடம் வந்து, ''இந்தப் பெட்டியில் தாங்கள் பயணம் செய்ய வேண்டாம், உங்களுக்கு வேறு கோச் ஏற்பாடு செய்துள்ளேன். அதில் பயணம் செய்யுங்கள்'' என்றார். உடனே, ''அப்படியெனில், அந்த கோச்சில் வந்த பயணிகளை என்ன செய்வீர்கள்?'' என்று கேட்டார் காந்தி.

அதற்கு ''அவர்களை இந்த கோச்சுக்கு மாற்றி விடுவேன்'' என்றார் நிலைய அதிகாரி. அதைக் கேட்ட காந்தி, ''வேண்டாம். அவர்கள் அத்தனை பேரும் இந்த கோச்சில் ஏற்பட்டுள்ள அசௌகரியங்களைச் சகித்து கொண்டு பயணம் செய்ய முடியும் என்றால், நானும் அதை ஏற்று இதே கோச்சில் பயணம் செய்கிறேன். என்னால் பலரும் துன்பத்துக்கு ஆளாவதை நான் விரும்பவில்லை'' என தெரிவித்தார். நிலைய அதிகாரி பிரமித்துப் போனார்.

- எம்.எஸ்.ஷண்முகப்ரியா,
உ. எண் 622,
சேலம்



வித்தியாசங்களைக் கண்டுபிடி!



இரண்டு படங்களுக்கும் இடையே ஐந்து வித்தியாசங்கள் உள்ளன. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.விடைகள் 56ம் பக்கம்

வாழை என்றவுடன், அதன் தண்டு, இலை, பட்டை, பூ, காய், பழம் என அதன் அனைத்தும் நமக்குப் பயன்படுபவை என்பது புரியும். குறிப்பாக, பல்வேறு வகையான வாழைப் பழங்கள் தரும் பயன்களை மட்டும் இங்கு காண்போம்.







- மலை வாழைப்பழம் மலச் சிக்கலைத் போக்கும்.
- மொந்தன் வாழைப்பழம் உடல் வறட்சியைப் போக்கும்.
- பச்சை வாழைப்பழம் உடலுக்குக் குளிர்ச்சி தரும்.
- நேந்திரம் வாழை, தோலுக்கு மினுமினுப்பைத் தரும்.
- பேயன் வாழை அம்மை நோயால் ஏற்பட்ட பாதிப்பை நீக்கும்.
- மஞ்சள் வாழை குடல்புண்களை ஆற்றும்.
- செவ்வாழை உயிரணுக்களைக் பெருக்கும்.

- கி.பாலாஜி, உ. எண் 657, ராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, மயிலாடுதுறை

கொழுப்பு கரைய...

பூண்டு என்றவுடன், சிலர் முகம் சுளிப்பர். ஆனால், பூண்டு உண்மையிலேயே அருமருந்து. வெள்ளைப் பூண்டு வீட்டில் இருக்கும் மருத்துவப் பொருள். இது இரத்தத்திலுள்ள அதிகப்படியான கொழுப்பைக் கரைத்துவிடும். எனவேதான் மாமிச சமையலில் பூண்டு கட்டாயம் சேர்க்கப்படுகிறது. மேலும், இதயக் கோளாறு வராமலும் தடுக்கும். பூண்டு ரசம், நாள்பட்ட இருமலை நீக்கும். உப்புடன் பூண்டை அரைத்து, அந்தச் சாற்றைத் தடவினால் சுளுக்கு குணமாகும். பசியைத் தூண்டும் சக்தி பூண்டுக்கு உண்டு. அது போன்றே வெப்பம் உண்டாக்கும் கபத்தையும் அகற்றும், சிறுநீரைப் பெருக்கி ரத்தத்தை சுத்தம் செய்யும். அதோடு, வாயுத் தொல்லையும் இல்லாமல் செய்யும்.



- டி.எம். ஆனந்த், பத்தாம் வகுப்பு, புனித அந்தோணியர் மேல்நிலைப் பள்ளி, திருச்செங்கோடு

ஆயிரம் ரூபாய்



I. சேகர் திங்கட்கிழமை வேலைக்குப் போனான். அவனுக்கு மிகக் குறைந்த கூலி கிடைத்தது. செவ்வாய்க் கிழமை வேலைக்குப் போனான். திங்களன்று கிடைத்த கூலியை விட 6 ரூபாய் அதிகம் கிடைத்தது. புதன் கிழமை வேலைக்குப் போனான். அன்று செவ்வாயன்று கிடைத்த கூலியைவிட 6 ரூபாய் அதிகம் கிடைத்தது. வியாழக் கிழமை வேலைக்குப் போனான். அன்று, முதல் நாளைவிட 6 ரூபாய் அதிகம் கிடைத்தது. வெள்ளிக்கிழமை வேலைக் குப் போனான். அன்றும் 6 ரூபாய் அதிகம் கிடைத்தது.

சனிக்கிழமை சேகர் வேலைக் குப் போகவில்லை. அன்று வீட்டில் உட்கார்ந்து திங்கள் முதல் வெள்ளி வரை கிடைத்த கூலி முழுவதையும் எண்ணிப் பார்த்தான். மொத்தம் 100 ரூபாய் இருந்தது. சேகர் ஒவ்வொரு நாளும் பெற்ற கூலி எவ்வளவு?

- கி.பாலாஜி, உ. எண் 657, மயிலாடுதுறை

II. (a) இரண்டு எண்களின் பெருக்குத் தொகை 2496. ஒரு எண் மற்ற எண்ணைவிட 4 அதிகம். அந்த எண்கள் என்ன?

(b) 3 எண்கள் - முதல் எண், இண்டாவது எண்ணைவிட 3 குறைவு. இரண்டாவது எண்ணையும், மூன்றாவது எண்ணையும் சேர்த்தால் மொத்தம் 66 வரும். அந்த எண்கள் எவை?

- சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை

III. ஆதனூரில் ஆறுமுகம் என்கின்ற பண்ணையார் இருந்தார். அவருடைய கணக்குப்பிள்ளை மிகமிகத் திறமை சாலி.

அந்தப் பண்ணையார் தம் கணக்குப்

பிள்ளையிடம் 1000 ரூபாய்களையும் 10 பைகளையும் கொடுத்தார். அந்த 1000 ரூபாயை 10 பைகளில் கட்ட வேண்டுமென்றும், தாம் கேட்கும் ரூபாய்களை பைகளை அவிழ்க்காமல் தர வேண்டுமென்றும் உத்தரவிட்டார்.

10 ரூபாய் கேட்டாலும் பையாகவே தர வேண்டும். ஆனால் 3, 4, 5, 6 பைகளாகக் கொடுக்கலாம். பையை கண்டிப்பாக அவிழ்க்கக் கூடாது.



பண்ணையார் விரும்பியபடியே கணக்குப் பிள்ளை கொடுப்பதானால் ஒவ்வொரு பையிலும் எவ்வளவு ரூபாய் கட்ட வேண்டும்?

IV. 1, 2, 3, 4, 5, 6 ஆகிய எண்களை ஒரே ஒரு முறை பயன்படுத்தி 100ஐ வரவழைக்க முடியுமா? முயன்று பாருங்கள்.

V. 'போர்வெல்' குழிக்குள் ஒரு ஓணான் விழுந்துவிட்டது. விழுந்தது வயதான ஓணான். ஒரே நேரத்தில் அதிக தூரம் ஏற முடியாத, அந்த ஓணான் கால்பிடிப்புச் சரியாக இல்லாமல் அடிக்கடி சறுக்கி விழும்.

போர்வெல் குழியின் ஆழம் இருபது மீட்டர். ஓணான் ஒரு மணி நேரத்துக்கு இரண்டு மீட்டர் தூரம் ஏறும். பிறகு ஓய்வு எடுக்கும். அந்த நேரத்தில் உறுதியாகப் பிடித்துக் கொண்டு நிற்க முடியாமல் ஒரு மீட்டர் சறுக்கி விழும். பிறகு மீண்டும் அதே வேகத்தில் ஒரு மணிக்கு இரண்டு மீட்டர் ஏறும். மீண்டும் ஒரு மீட்டர் சறுக்கி கீழிறங்கிவிடும்.



இவ்வாறு ஒரு மணிக்கு இரண்டு மீட்டர் ஏறி, ஒரு மீட்டர் இறங்கினால் அது அந்தக் குழியிலிருந்து வெளிவர எவ்வளவு நேரமாகும்?

- கி.சிந்து, உ. எண் 786,
மயிலாடுதுறை


VI. 100 ஆப்பிள் பழங்களை 100 பேருக்குக் கீழ்க்கண்ட முறையில் பங்கிட்டுக் கொடுக்க வேண்டும்.

1 ஆண் - 3 ஆப்பிள், 1 பெண் - 2 ஆப்பிள், 1 குழந்தை - ½ ஆப்பிள்

அப்படியானால் எத்தனை ஆண்களுக்கு, எத்தனை பெண்களுக்கு, எத்தனை குழந்தைகளுக்கு எத்தனை ஆப்பிள்கள் வரும்?

- அ.அனீஸ் ஃபாத்திமா,
உ. எண் 34,
தேனி




கோகுலம்
ஜனவரி 2010



ரன் பேசும் வார்த்தைகள்..!

கேட்காத

அன்று ராகேஷுக்குப் பிறந்த நாள்.

தன்னுடைய வகுப்புத் தோழர்கள் சிலரையும் அவன் வீட்டுக்கு அழைத்திருந்தான். எல்லாரும் வாழ்த்த கேக் வெட்டி கொண்டாடினான். அந்த மாலைப் பொழுது சந்தோஷமாகக் கழிந்தது.

அனைவரும் சென்ற பிறகு, தனக்குப் பரிசாக வந்த ஒரு புத்தகத்தை எடுத்தான். அறிவியல் செய்திகள் நிரம்பிய அந்தப் புத்தகம், நண்பன் வினய் கொடுத்த பரிசு!



புத்தகத்தின் முதல் அத்தியாயம் ஒலி அலைகளைப் பற்றி இருந்தது. 'மனிதனால் சுமார் 20 ஆயிரம் வரை அதிர்வெண் உள்ள ஒலியை - அதாவது சத்தத்தை, மட்டுமே கேட்க முடியும். ஆனால், அதைவிட அதிகமான அதிர்வெண் கொண்ட ஒலியை வெளவால் உணரும்.' செய்தி சுவாரஸ்யமாக இருந்ததால் தொடர்ந்து படித்தான்.

வெளவாலின் காதை அடைத்துவிட்டு, அதன் வாயில் டேப் ஒட்டிவிட்டால், அது தன் பாதையில் வரும் பொருட்களிலிருந்து எளிதாகத் தப்ப முடியாது. அதற்கு காரணம், வெளவால் உயர் 'ஃப்ரீக்வென்சி' ஒலியை ராடார் போல பயன்படுத்துகிறது. இது தனது வாயால் எழுப்பும் ஒலி எதிரே அக்கம்பக்கத்திலிருந்து வரும் பொருட்களில் பட்டுத் திரும்ப வருகிறது. இதன் மூலம், அது தனது பக்கத்தில் உள்ள பொருட்களைப் பற்றி அறிந்து பறக்கிறது.

ராகேஷுக்கு முதல் அத்தியாயம் மிகவும் பிடித்துப்போனது. உடனே அடுத்த அத்தியாயத்தைப் படிக்க ஆரம்பித்தான்.

அதைப் படித்ததும், அவனுக்கு 'ஒரு சாதாரண விசிலின் குழாயின் நீளம் குறைவாக்கப்பட்டால், அதில் ஃப்ரீக்வென்சி அதிகரிக்கும். அப்போதுதான் உயர் ஃப்ரீக்வென்சி அலைகள் உற்பத்தி செய்யப்பட்டு, அது மனிதருக்கு கேட்காது' போன்ற விபரங்கள் தெரியவந்தன.

உடனே, ராகேஷ் தன்னிடமிருந்த ஒரு நீளமான விசிலை எடுத்தான். பிறகு ஒரு ஸ்பேனர் எடுத்துக் கொண்டு தரையில் அமர்ந்தான்.

அப்போது, அறைக்குள் வந்த, அவன் அம்மா, "ராகேஷ், போய்த் தூங்கு. ரொம்ப நேரமாயிடுச்சு. இவ்வளவு நேரம் கண் முழிக்கிறது, உடம்புக்கு நல்லதில்லை. நாளைக்கு ஸ்கூலுக்குப் போகணும் இல்லை" என்றாள்.

மறுநாள் காலை சீக்கிரமே எழுந்தான். விசிலை பின்பக்கமாக வெட்டினான். பிறகு அதில் ஒரு கார்க்கை, குழாயின் உள்ளே வைத்து, அதன் உட்புற நீளத்தை குறைத்ததும், விசிலின் சத்தம் அதிகரித்துக் கொண்டே சென்றது. இதைக் கேட்டதும் அவன் மிகவும் சந்தோஷமடைந்தான்.

ஆனால், விசிலின் நீளம் குறையக் குறைய என்னதான் ஊதினாலும் அவனுக்கு எதுவுமே கேட்கவில்லை. 'நீளம்

குறைந்த விசில் சத்தத்தை மனிதனால் கேட்க முடியாது' என்று, புத்தகத்தில் படித்தது அவன் நினைவுக்கு வந்தது.

'ஒரு வேளை இந்த சத்தத்தை விலங்குகளால் கேட்க முடியுமோ' என்று தோன்றியது. உடனே, விசிலை வேகமாக ஊதினான்.

அப்போது, அவன் அறையில் அமர்ந்திருந்த அல்சேஷன் நாய், உஷாராகி அக்கம் பக்கம் பார்க்கத் தொடங்கியது.

இதைப் பார்த்ததும் ராகேஷின் கண்கள் சந்தோஷத்தில் பளபளத்தன. அவன் வேகமாக விசிலை ஊத ஊத, நாய் சுற்றிச் சுற்றி வந்தது.

பிறகு, விசிலை எடுத்து வைத்த ராகேஷ், குளித்து பள்ளிக்குக் கிளம்பினான்.

அப்போது, ''ராகேஷ், போகலாமா?'' என்றபடியே வந்தான் வினய்.

ஒலி!



க.பாரதி, ஊராட்சி ஒன்றிய தொடக்கப்பள்ளி, காயக்காடு.

படிப்பினைக்கதை

கையில் சாக்லெட் டப்பா மற்றும் முதுகில் ஸ்கூல் பேக்குடன், சட்டைப் பாக்கெட்டில் அந்த விசிலையும் போட்டுக்கொண்டு கிளம்பினான் ராகேஷ்.

இருவரும் சில அடி எடுத்து வைத்திருப்பர். அவர்கள் வகுப்பு தாதாவான அமர் மற்றும் சில நண்பர்கள் இவர்களை வழி மறித்தனர்.

அமரும், ராகேஷின் வகுப்பில்தான் படிக்கிறான். ஆனால், முரட்டு சுபாவம் கொண்டவன். மற்ற மாணவர்களிடம் சண்டையிடுவது, அடிப்பது... என்று நடந்து கொள்வான். அதனால், அவனைக் கண்டதும் அனைவரும் ஒதுங்கிவிடுவர். அதனால், அவன் முரட்டுத்தனம் இன்னும் அதிகரித்தது. அவனுக்கு பயந்த சிலர், அவனுக்கு துணையாயினர்.

வழிமறித்த அமரிடம், 'எங்களை' போக விடுங்க'' என்றான் வினய்.

''முதல்ல சாக்லெட் டப்பாவைக் கொடு. அப்பத்தான் வழி விடுவேன்.''

''அப்படி கொடுக்கலைன்னா, என்ன செய்வே?'' ராகேஷ் கோபமாய்க் கேட்டான்.

''நானே பறிச்சுப்பேன்,'' என்றான் அமர்.

''இவன் இப்படிச் சொன்னா கேட்க மாட்டான்'' என்று நினைத்த ராகேஷ், ''சரி அமர், நான் சாக்லெட் டப்பா தர்றேன். ஆனா அதுக்கு முன்னாடி நீ இந்த விசிலை ஊதிக் காட்டணும்,'' என்றான்.

''எங்கே விசில்? கொடு, ஊதிக் காட்டறேன்'' என்றான் அமர்.



- ஜி.பிரபாகரன், உ. எண் 961, காஞ்சிபுரம்

ராகேஷ் விசிலை அவன் கையில் கொடுத்தான். அமர் விசிலை நாலைந்து முறை ஊதியதும், ராகேஷின் அல்சேஷன் நாய் குரைத்த படி அங்கு வந்து நின்றது.

ராகேஷ், நாயிடம் சைகையில், அமரை விரட்டும்படிக் கூறினான். அதைப் புரிந்து கொண்ட நாயும், அமரை நோக்கிப் பாய்ந்தது. இதைப் பார்த்த அமரின் நண்பர்கள் பதறி ஓடினர். விசிலை வீசி எறிந்து விட்டு, ஓட்டம் பிடித்தான் அமர். நாய் துரத்தியது!

நிற்காமல் ஓடினான் அமர். ஓடிய வேகத்தில், வழியில் தோண்டியிருந்த பள்ளத்தைக் கவனிக்காத அமர் பொத் தென்று அதற்குள் விழுந்தான். துரத்தி வந்த நாய், மேலே நின்று கொண்டு குரைத்தது. விழுந்ததுகூட அமருக்கு வலிக்கவில்லை; விசில் ஊதியவுடன் நாய் எப்படி வந்தது என்பதுதான் அவனுக்குப் புதிராக இருந்தது!

அதற்குள் ராகேஷும் வினய்யும் அங்கு வந்து சேர்ந்தனர். "அமர், இனிமே நீ யாரையும் இந்த மாதிரி துன்புறுத்த மாட்டேன்னு சொல்லு. உன்னை நாய் ஒண்ணும் பண்ணாது" என்றான் ராகேஷ்.

"சரி, ஆனா நாய் ஏன் வந்துச்சுன்னு நீ சொல்லணும்" என்றான் அமர் பதிலுக்கு.

'சரி' என்ற ராகேஷும், வினயும் அவனை மேலே தூக்கிவிட்டனர்.

ஒலி அலை பற்றிய விஷயத்தை ராகேஷ் சொல்ல, அமர் ஆச்சரியப் பட்டான். சொன்னது போலவே, முரட்டுத்தனத்தை விட்டுவிட்ட அமர், இப்போது ராகேஷின் 'குட் ஃப்ரண்ட்ஸ்' பட்டியலில் ஒருவன்!



கொடுக்கப்பட்டுள்ள எண்களை இணைத்து ஒளிந்திருப்பது என்ன என்று கண்டுபிடியுங்கள்.



புள்ளிகளை இணையுங்கள்



I. 1. சொல்லச் சொல்லக் கேட்பாள்; திரும்பச் சொல்ல மாட்டாள். வாங்கி வாங்கிச் சேர்ப்பாள்; வார்த்தை பேசமாட்டாள் - அவள் யார்?

2. குடிக்க உதவாத நீர், குளத்தில் தங்காத நீர், கை கால் தொடாத நீர், காடெல்லாம் ஓடும் நீர் - அது என்ன?

3. ஓடியாடிக் கத்தும்; உடலைத் தேடிக் குத்தும் - அது என்ன?

4.பையில் அது இருந்தால், வேறு எதுவும் தங்காது - அது என்ன?

5. நூல் இல்லை; ஊசி உண்டு. வாய் இல்லை; பாடும் - அது என்ன?

6. காய்க்காத மரம்; பூக்காத மரம் இலையுண்டு, கிளையுண்டு, நிழலுண்டு - அது என்ன மரம்?

7. மஞ்சள் சட்டை மாப்பிள்ளை; மண மணக்கிறார் வீட்டிலே - அது என்ன?

8. நரிக்கதையில் வந்த பழம்; நாடறிந்த நல்ல பழம்; கறுப்பு, சிவப்பு, பச்சை நிறங்களில் கடையில் எல்லாம் கிடைக்கும் பழம் - என்ன பழம்?

9. பச்சை நிறச் செடியில் பவளங்கள் தொங்குது - அது என்ன?

10. சதையும் தோலும் ஒட்டாமல்; தானே விளங்கும் இப்பழந்தான்; ஒட்டி உறவாடாமல் வாழ்வீரென, உலகுக்கு உணர்த்தும் நீதி தனை - இது என்ன?

11. காக்கையைப் போல் கருமை நிறம்; கையால் விண்டால் ஊதா நிறம், வாயால் மென்றால் நீல நிறம் - அது என்ன?

12. ஓகோ மரத்திலே உச்சாணிக் கிளையிலே, ஓட்டுச் சட்டியிலே, களி மண் இருக்கிறது - அது என்ன?

- கி.சிந்து, உ. எண் 786, ராஜ்
மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
மயிலாடுதுறை



II. 1. தலையெடுத்துத் தடிமுழமாம், அகப்பையன்று; தன்வாயால் மரம் கொத்தும் பறவையன்று; வலிய புயம் தட்டி எழும், மல்லரன்று; வந்தகுலம் தனையழிக்கும், நஞ்சம் அன்று; குவலயத்தில் இதன் பெயரை வழுத்துவீரே!

2. ஊருக்கு நடுவே உயர்ந்து நிற்கும், உருவங்கள் பலப்பல சுமந்து நிற்கும், உச்சியில்

கலசம் தரித்திருக்கும் - அது என்ன?

- த.தாரணி, உ. எண் 785,
மூன்றாம் வகுப்பு, தூய மார்ஸினா
மெ. மே. நி. பள்ளி, அம்மாபேட்டை

III. 1. விழுந்தால் படுக்காது, எழுந்தால் நிற்காது - அது என்ன?



V. 1. ஒரு பூ பூத்து நூறு காய்கள் காய்க்கும் - அது என்ன?

2. பச்சைக் கிளி, பறக்க முடியாத கிளி, கொம்பிலே இருக்கும் கிளி, ஆனால் மூக்கு சிவப்பல்ல - அது என்ன?

3. எவ்வளவு ஊதினாலும் பருக்கவே மாட்டான், மருத்துவமனைக்கும் செல்ல மாட்டான் - அவன் யார்?

- ஒய். ரவிராகுல்,
ஈரோடு

மலையில் ஆயிரம் பூ?



2. சிவப்புச் சட்டிக்குக் கறுப்பு மூடி - அது என்ன?

3. கடிவாளம் போட்டாலே காலில் கிடக்கும் - அது என்ன?

4. உணவை எடுப்பான்; ஆனால் உண்ண மாட்டான் - அவன் யார்?

5. நனைந்தாலும் நடுங்க மாட்டான் - அவன் யார்?

6. நோயுமில்லை, நொடியுமில்லை, நாள் எல்லாம் மெலிகிறார் - அவர் யார்?

- ஆர்.வினீத்மாதவன்,
உ. எண் 1191, மதுரை

IV. 1. மரத்துக்கு மேலே பழம், பழத்துக்கு மேலே மரம் - அது என்ன?

2. மூடாத தொட்டியில் எடுக்க எடுக்க நீர் இருக்கும் - அதுஎன்ன?

3. கிண்ணம் நிறைய தண்ணீர் இருக்கு, குருவி குடிக்க வழியில்லை - அது என்ன?

4. ஆள் ஏறாத மலையிலே ஆயிரம் பூப்பூத்திருக்கு - அது என்ன?

- ஏ.கலைஹத் ஃபைஹா,
கீழக்கரை

விடைகள்:



I. 1.காது, 2.கானல் நீர், 3. கொசு, 4.கிழி சல், 5.கிராமபோன், 6.கிளுவைமரம் 7. எலுமிச்சம்பழம், 8.திராட்சைப் பழம், 9. மிளகாய்ப் பழம், 10.புளியம்பழம், 11. நாவற்பழம், 12. விளாம்பழம்

II. 1.கோடரி, 2.கோபுரம்


III. 1.தஞ்சாவூர் பொம்மை, 2.குன்றி மணி, 3.செருப்பு, 4. அகப்பை, 5.குடை, 6. காலண்டர்

IV. 1.அன்னாசிப்பழம், 2.கடல், 3.இள நீர், 4.நட்சத்திரம்


V. 1.வாழைமரம், 2.மாங்காய், 3. புல்லாங்குழல்



ஷிஃபானா அஃப்ஸின்,
உ. எண் 913,
கூத்தாநல்லூர்



என்.ஸக்திஸ்ரீ,
முதல் வகுப்பு, செயின்ட்.
லியோஸ் பள்ளி, கோவை



எஸ்.நிஸாந்த்,
மூன்றாம் வகுப்பு, தி இந்தியன்
பப்ளிக் பள்ளி, ஈரோடு



டி.மரியா டொமெட்ரியஸ்,
நான்காம் வகுப்பு, சாரதா நர்சரி
& பிரைமரி பள்ளி, செஞ்சி



ஜி.ப்ரணவ்,
உ. எண் 424, திருச்சி

சுட்டீஸ் கைவண்ணம்!

வெளவால் வாத்தியார்!

கதை: கோ. ஹரிணி, சாரதா மெட்ரிக் பள்ளி, செஞ்சி. படம்: பிள்ளை



மூணாறுக்குச் சுற்றுலா!

காலாண்டுத் தேர்வு விடுமுறையில் எங்கள் வகுப்பு மாணவ மாணவியர் இரண்டு நாள் சுற்றுலா சென்று வரலாம் என்று முடிவாயிற்று.

'அருகிலிருக்கும் மூணாறுக்குச் சென்று வரலாம்' என்றார் ஆசிரியர்.

'தென்னகத்துக் காஷ்மீர்' என்று மூணாறைச் சொல்வதுண்டு. உயர்ந்தோங்கிய மலைகள், தேயிலை மற்றும் காபி தோட்டங்கள், அருவிகள், அடர்ந்த காடுகள் என மிகச் சிறந்த சுற்றுலாத் தலம் மூணாறு. எங்கள் ஊரில் இருந்து 60 கி.மீ. தொலைவில் உள்ளது.

''சரி! ஒவ்வொருவரும் இரண்டு நாள் செலவாக 500 ரூபாய் கொண்டு வந்துவிடுங்கள்!'' என்றார் ஆசிரியர்.

அப்போது ஒரு மாணவன் எழுந்து, ''சார்! ஒரு பைசா செலவில்லாமல் நான் உங்கள் எல்லாருக்கும் மூணாறைச் சுற்றிக் காட்டுகிறேன்!'' என்றான்.

எல்லாருக்கும் ஒரே வியப்பு!

''எப்படிடா?'' என்றார் ஆசிரியர்.

கனவில் படித்தவன்!


காலாண்டுத் தேர்வு தொடங்க சிறிது நேரம்தான் இருந்தது. தேர்வினால் ஏற்பட்ட அச்சத்தோடும், கவலையோடும் பேசினான் நண்பன் முத்து. ''என்ன படிச்சாலும் புரியலைடா. ரொம்ப டென்ஷனா இருக்கு.'' அவனைக் கிண்டல் செய்வது போல, ''ஏண்டா, புத்தகத்தைத் தலைகீழா வெச்சிகிட்டுப் படிச்சியா?'' என்று நாங்கள் கிண்டல் செய்தோம். அவனோ, ''இல்லடா. அது சைனீஸ் மொழில இருந்தது. அதனால படிக்க முடியலை,'' என்றான்.


''அப்ப மூடி வெச்சிட்டு படுக்க வேண்டியது தானே?'' என்றேன். உடனே, ''இது நடந்ததே கனவில்தான்...'' என்றான் அவன் சிரிக்காமல்.

அதைக் கேட்டுக்கொண்டே வந்த எங்கள் வகுப்பாசிரியை சொன்னார் : ''கனவுல கூட, நீ ஸ்கூல் பாடங்களைப் படிக்கிறதில்லைன்னு சொல்லு.'' அதைக் கேட்ட மாணவர்கள் அனைவரும் குபீரென்று சிரித்தார்கள். தேர்வு பற்றிய அச்சம் விலகி, மனம் தெளிவாகியது.



- மு. அருண்குமார், உறுப்பினர் எண் : 670 ஆர்.வி. அரசு ஆண்கள் மே.நி.பள்ளி, ஓசூர்





அவன் எழுந்து போய், சாக்பீஸை எடுத்து பிளாக் போர்டில் 666 என்று பெரிதாக எழுதி அதைச் சுற்றிலும் ஒரு வட்டம் போட் டான்.

(666)

''பாருங்கள் சார்! செலவில்லாமல் மூணாறைச் சுற்றிக் காட்டிவிட்டேன்!'' என்று அவன் சொல்ல, வகுப்பறையே சிரிப்பால் அதிர்ந்தது.

– அ.அனீஸ் ஃபாத்திமா, உ. எண் 34,
சிசம் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி,
போடி

அதிர்ஷ்டமான காலம்!

தமிழாசிரியர் அன்று இறந்த காலம், நிகழ்காலம், எதிர்காலம் பற்றி பாடம் நடத்திக் கொண்டிருந்தார். அதில் ஒரு பையன் சந்தேகம் கேட்டான். அவர் உதாரணம் சொல்லி விளக்க முற்பட்டார்.

''நீ நேற்று நண்பர்களுடன் சினிமாவுக்குச் சென்றாய்?''

''இன்று உங்களுக்கு நான் வகுப்புத் தேர்வு வைக்கப் போகிறேன்!''

''நாளை உங்களுக்குப் பள்ளி விடுமுறை!'' என்று உதாரணம் சொல்லி,

''இவை ஒவ்வொன்றும் என்ன காலம்? சொல்லு பார்ப் போம்'' என்றார்.

அந்தப் பையன் எழுந்து, ''முதல் உதாரணம் : எனக்குச் சந்தோஷக் காலம்; இரண்டாவது, எங்களுக்குக் கஷ்ட காலம்;மூன்றாவதுஎங்களுக்கு அதிர்ஷ்டமான காலம்'' என்று சொன்னான் பளிச்சென்று. ஆசிரியர்உட்படஅனைவரும் விழுந்து விழுந்து சிரித்தோம்.

– பி.சர்வேஸ்வரன்,
உ. எண் 456, மதுரை



அழகுக்கு ஆபத்து!

இந்தியப் பெருங்கடலில் 300 சதுர கிலோ மீட்டர் பரப்பளவில், கை தவறி விழுந்து சிதறிய முத்துக்களைப் போன்று பரந்து கிடக்கின்றன மாலத்தீவுகள். பிரிட்டிஷ் அரசாங்கத்திடமிருந்து ஜூலை 26, 1965 அன்று மாலத்தீவு விடுதலை பெற்றது. நீண்டு பரந்து கிடக்கும் கடல் பரப்பில், 1190 தீவுகளைக் கொண்ட தீவுக் கூட்டம் இது! இருநூறு தீவுகளில் மட்டுமே மக்கள் வாழ்கின்றனர். மற்ற தீவுகள் பவளப் பாறைகளாலும், கடல் சீற்றத்தாலும் பயனற்றுப் போயுள்ளன. இந்நாட்டின் தலைநகரம் மாலே. மொழி 'திவேஹி' என்றழைக்கப்படுகிறது. நீளமான கடற்கரைகளும், பச்சைப் பசேலென்ற இயற்கையும் மாலத்தீவுகளின் அழகு ரகசியம். கடலில் மூக்குளிப்பதற்கான (diving) உலகின் தலைசிறந்த பத்து இடங்களில் ஒன்று இது!

இந்த நாட்டின் தேசியக்கொடி இரண்டு செவ்வகங்களாப் பிரிந்து, முதல் சுற்றில் சிவப்பும், உள்ளே பச்சையும் கொண்டுள்ளது. அதில் ஒரு பிறை நிலவும் காட்சியளிக்கிறது. இந்த நாட்டின் பணம் 'ரூபியா' என்றழைக்கப்படுகிறது. ஒரு 'ரூபியா' என்பது 100 'லாரிசு'க்கு ஒப்பாகும். அதாவது இந்தியாவில் ஒரு 'ரூபாய்', 100 'பைசா' என்பதைப் போல!

இங்கு பாய் முடைதல், கைவினைப் பொருட்கள் தயாரிப்பு, கயிறு திரித்தல்... உள்ளிட்ட தொழில்கள் வளர்ச்சி பெற்றுள்ளன. நாட்டின் வருவாயில் பெரும்பகுதி, சுற்றுலாவின் மூலமே கிடைக்கிறது.








மு. அருண்குமார்,
உ.எண்: 670,
ஓசூர்.


அதற்குக்காரணம், மாலத்தீவுகளின் அழகான கடற்கரைகள்தான். கடலின் அடிமட்டமும் தட்டுப்படுகின்ற அளவுக்கு, ஆழமற்ற தெளிவான நீர்ப்பரப்பைக் கொண்டது. சுற்றுலாவை அடுத்து பெரும் வருமானம் அளிப்பது, மீன்பிடித் தொழில்தான்! விவசாயம் மிகக் குறைந்த அளவில்தான் நடைபெறுகிறது. காரணம், விவசாய நிலம் குறைவு; அதற்கான பணியாளர்களும் குறைவு!

சிறப்புகள் என்று பலவற்றைக் கொண்டது மாலத்தீவு. இருப்பினும், கவலை தரத்தக்க ஒரு செய்தியும் உண்டு. பூமி வெப்பமடைதல் மூலம், அண்டார்டிக்கா பனிமலைகள் உருகுவதால் கடலின் நீர்மட்டம் 1.4 மீட்டர் வரை அதிகரிக்க வாய்ப்புள்ளது என்கிறார்கள் ஆய்வாளர்கள். அப்படி நடந்தால், முதல் ஆபத்து அழகு கொஞ்சம் இந்த மாலத்தீவுகளுக்குத்தான் என்பதே ஆய்வாளர்களின் கவலை!



உலகைச்


* ஹீலியாஸ் விமானம்


* சிலந்தி வலை

* ஒரு சிலந்தி ஒரு மணி நேரத்தில் 112 மீட்டர் நீளமுள்ள நூலை உருவாக்கிவிடும். உலகினை மேலாகச் சுற்றி வரும் அளவுக்கு நீளம் கொண்ட ஒரு சிலந்தி நூல் இருப்பினும் அதன் எடை 300 கிராம்தான் இருக்கும். அவ்வளவு மெல்லியது!

* கொலம்பியா நாட்டில் பாயும் விசாடா (vichada) என்ற நதியில் ஓடுவது கனநீர். இந்த நீரில் அமிலத்தன்மை அதிக அளவில் காணப்படுவதால் மீன்கள் இருப்பதில்லை.


* பிக்மி மார்மோசெட்

* கடிகாரத்தில் ஒமேகா என்ற பெயர் வந்த காரணம் என்ன தெரியுமா? கிரேக்க மொழியின் கடைசி எழுத்து ஒமேகா (ω). இதற்குப்பின் அந்த மொழியில் எழுத்துக்கள் இல்லை. இதைப் போல் இனி எவரும் கடிகாரம் தயாரிக்க முடியாது என்ற பொருளில் இந்தப் பெயரைத் தேர்வு செய்தனர்.

* 'கில்லர் வேல்' என்ற திமிங்கிலம் நீரின் மேல்பரப்புக்கு வரும்போது, அதன் இதயம் நிமிடத்துக்கு 60 முறையும், நீரின் கீழ்ப்பாகத்தில் இருக்கும் போது 30 முறையும் துடிக்கின்றது.

- ஏ.சுலைஹுத் ஃபைஹா,
உ. எண் 998, கீழக்கரை

* சிங்கங்கள் நிறைந்த 'கிர்' காடுகள் குஜராத் மாநிலத்தில் உள்ளன.

* மின்சாரத் தீயை அணைக்க 'கார்பன் டெட்ரா குளோரைடு' பயன்படுகிறது.

சுற்ற 300 கிராம்!





✱ சூரிய ஒளியில் இயங்கும் விமானத்தை 2001ல் அமெரிக்கா தயாரித்தது. அதன் பெயர் 'ஹீலியாஸ்'.

✱ ஜப்பானில் உள்ள ஒரு வகைச் செடி 50 அடி வரை வளரும். இச்செடிகள் சூரியன் மறைந்ததும், உச்சிக் கிளையிலிருந்து வெண்ணிறப் புகையை வெளியிடுகின்றன. அதனால் 'எரிமலை செடி' என்று இதனை அழைக்கின்றனர்!

- ம.விவேக், குட்டம்

✱ உலகில் இருந்த 250 வகை குரங்கினங்களில் தற்போது 80 வகைகளே எஞ்சி இருக்கின்றன.


✱ குரங்குகள் பிரேசில் நாட்டில்தான் அதிகமாக காணப்படுகின்றன.

✱ மிகச் சிறிய குரங்கு இனம் 'பிக்மி மார்மோஸ்ட்'. இவை 9.1 செ.மீ. உயரமே இருக்கும்.

✱ குரங்கின் மூளை இரு பிரிவுகளாக இருக்கும். ஒன்று உடலையும் மற்றது வாலையும் இயக்கும்.

- ஆர்.ரமேஷ்குமார், ஒன்பதாம் வகுப்பு,அரசு மேல்நிலைப் பள்ளி, கோவை

✱ 'கில்லர்' திமிங்கலம்






✱ இந்தியாவில் தயாரிக்கப்பட்ட முதல் ஏவுகணை 'ப்ருதிவி'

✱ இந்தியாவில் முதல் பொதுத் தேர்தல் நடைபெற்ற ஆண்டு 1951.

✱ புலிகள் இனத்தைப் பாதுகாக்க இந்திய அரசு மேற்கொண்டுள்ள திட்டம் 'ப்ராஜக்ட் டைகர்' (Project Tiger).

- எஸ்.வினீத் மாதவன், உ. எண் 1196, மதுரை





சரியான்னு பாருங்க!

I. திங்கள் கிழமை 1 கூலி, செவ்வாய் 1 + 6, புதன் 1 + 12, வியாழன் 1 + 18, வெள்ளி 1 + 24 = 5 கூலி + 60 ரூபாய்.

100 - 60 = 40

40/5 = 8 ரூபாய் (1 கூலி)

II. (a) 48, 52

(b) 33, 36, 30

III. பை எண் (1) - 001.00; பை எண் (2) - 002.00; பை எண் (3) - 004.00; பை எண் (4) - 008.00; பை எண் (5) - 016.00; பை எண் (6) - 032.00; பை எண் (7) - 064.00; பை எண் (8) - 128.00; பை எண் (9) - 256.00; பை எண் (10) - 489.00.

மொத்தம் ரூபாய் 1000

IV. 15 + 36 + 47 + 2 = 100

V. 19 மணி நேரமாகும். குழியின் ஆழம் 20 மீட்டர். 2 மீட்டர் ஏறி 1 மீட்டர் சறுக்கிவிட்டால் 1 மணி நேரத்துக்கு 1 மீட்டரே ஏறுகிறது. 18 மீட்டர் ஏற 18 மணி நேரமாகும். 19ம் மணி நேரத்தில் 2 மீட்டர் ஏறி மேலே வந்துவிடும். பிறகு கீழே சறுக்க வழியில்லை. அதனால் ஓணான் குழியிலிருந்து வெளிவர மொத்தம் 19 மணி நேரமாகும்.

VI.

ஆண்கள் 11, ஆப்பிள் 3 (11 x 3) = 33

பெண்கள் 15, ஆப்பிள் 2 (15 x 2) = 30

குழந்தைகள் 74, ஆப்பிள் (74 x½) = 37

ஆக மனிதர்கள் 100 பேருக்கு 100 ஆப்பிள்களை விதிமுறைப்படி பங்கிட்டுக் கொடுக்கப்பட்டது.

வித்தியாசங்களைக் கண்டுபிடி!

1. துண்டு, 2.குரங்கு கையில் உள்ள கயிறு, 3.மீசை, 4.குழந்தையின் சட்டை நிறம், 5. நிற்கும் சிறுவன்

அன்பு நண்பர்களே...

'கோகுலம் டைஜஸ்ட்' பகுதிக்கு படைப்புகளை அனுப்பும்போது உங்கள் பெயர், வகுப்பு, பள்ளி, வீட்டு முகவரியைத் தெளிவாக குறிப்பிட வேண்டும்.

அனுப்ப வேண்டிய முகவரி :

ஆசிரியர் - கோகுலம் (டைஜஸ்ட் பகுதி)

47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல், சென்னை - 600 032

படைப்புகளை அனுப்புங்கள்; பங்கேற்று அசத்துங்கள்!



தாஜ்மஹால் என்றதும், யமுனைக் கரையில் ஷாஜஹான் கட்டியதுதான் நினைக்கு வரும். ஆனால், மராட்டிய மாநிலம், அகமது நகர் அருகில் உள்ள ஔரங்கபாத்தில் அமைந்துள்ளது இன்னொரு தாஜ்மஹால்! அதைக் கட்டியவர் ஔரங்கசீப் என்பதுதான் ஆச்சர்யம்!

இந்தியாவை ஆட்சி செய்த முகலாய மன்னர்கள் வரிசையில், ஔரங்கசீப் வியப்புக்கு உரியவர். தம் தந்தை ஷாஜஹானிடமிருந்து முற்றிலும் வேறுபட்டவர். ஆடம்பரச் செலவுகள், கேளிக்கை உள்ளிட்ட பொழுது போக்குகள் போன்றவற்றை அறவே வெறுத்தவர் ஔரங்கசீப்.

கிழிந்துபோன தம்முடைய ஆடைகளை, தாமே தைத்து அணிந்து கொள்ளும் அளவுக்கு எளியவராக வாழ்ந்த ஔரங்கசீப், தன் மனைவிக்காக அழகிய கல்லறை ஒன்றை எழுப்பியுள்ளார் என்பதுதான் வியப்பின் காரணம்!

ஆனால், தாஜ்மஹாலின் எழிலோடும் நுண்ணிய வேலைப்பாட்டோடும் ஒப்பிட்டுப் பார்த்தால் இக்கட்டடம் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. 'தன் தந்தை ஷாஜகான் கட்டிய தாஜ்மஹாலைப் போல தன்னால் படைக்க இயலவில்லை', என்ற மனக்குறை ஔரங்கசீப்புக்கு இருந்ததாக வரலாற்று ஆசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

கலை ஆர்வம் இல்லாதவர் ஔரங்கசீப் என்ற கருத்து பொதுவாக நிலவி வருகிறது. இருப்பினும் ஔரங்கசீப்புக்கு இக்கலையில் ஆர்வம் இருந்தது என்பதற்கு அவருடைய மனைவி தில்ரஸ்பானுவின் கல்லறையே அடையாளம்.

- எஸ்.ஸ்ரீனிவாஸ்,
உ. எண் 135, சேலம்

இன்னொரு தாஜ்மஹால்!



ஐம்பது கிராம் எங்கே?

சந்திரன், ரொட்டி வியாபாரம் செய்பவர். ரொட்டி தயாரிப்பதற்கான வெண்ணெயை அவர் தினமும் ஒரு வெண்ணெய் வியாபாரியிடம் வாங்குவார். அந்த வியாபாரி ஒரு பொட்டலத்தில் வெண்ணெயைக் கட்டிக் கொண்டு வந்து கொடுப்பார். சந்திரன் அந்த வெண்ணெயை எப்போதும் எடை போட்டுப் பார்க்க மாட்டார். வந்ததும் வாங்கி மாவில் கலப்பார். ரொட்டி சுடுவார், விற்றுக் காசாக்கி சேர்த்துக் கொள்வார். இப்படியே பல நாட்கள், பல மாதங்கள் கடந்தன.

திடீரென ஒரு நாள் சந்திரனுக்கு சந்தேகம் எழுந்தது. 'தினசரி வெண்ணெய் கொண்டு தருகிறாரே, அதன் அளவு சரியாக இருக்குமா?' இந்த எண்ணம் வந்தவுடன், சோதித்துப் பார்க்க வேண்டியதுதான் என்று முடிவெடுத்தார். மறுநாள்... வியாபாரி வெண்ணெய் கொண்டு வந்தார். சந்திரன் அதை எடை போட்டுப் பார்த்தார். அதில் ஐம்பது கிராம் குறைவாக இருந்தது. சந்திரனுக்கு ஏமாற்றம், ஆத்திரம், கோபம் எல்லாம் ஒரு சேர வந்தன. ஒரு நாளைக்கு ஐம்பது கிராம் என்றால், ஒரு மாதத்துக்கு ஒன்றரை கிலோ, ஒரு வருடத்துக்கு? நினைக்க நினைக்கப் பொறுக்கவில்லை அவருக்கு.

''இத்தனை காலமாக என்னை ஏமாற்றிவிட்டாயே... உன்னைச் சும்மா விடப் போவதில்லை. வா நீதிபதியிடம்'' எனக் கூறி, வியாபாரியை இழுத்துக் கொண்டு நீதிபதியிடம் போனார் சந்திரன். தமது வாதத்தை நீதிபதியிடம் சொல்லி வெண்ணெய்ப் பொட்டலத்தை அவர் முன் நீட்டினார். அது எடை போட்டுப் பார்க்கப்பட்டது. சந்திரன் சொன்னதுபோல், ஐம்பது கிராம் குறைவாகவே இருந்தது. அவர் சொன்னது சரிதான். இருந்தாலும் வியாபாரியின் வாதத்தைக் கேட்க வேண்டுமல்லவா? நீதிபதியின் முன் நின்றிருந்த வியாபாரி சொல்லலானார் :

''ஐயா நான் படிக்காதவன்; ஏழை. என்னிடம் தராசு மட்டும்தான் இருக்கிறது. எடைக்கல் இல்லை. எனவே எடைக்குப் பதிலாக, தினசரி இவரிடம் கால் கிலோ எடையுள்ள ஒரு ரொட்டியை வாங்கிப் போவேன். எடைக்கல்



நாடோடிக்கதை

லுக்குப் பதிலாக - அந்த ரொட்டியை கால் கிலோ எடையாக வைத்து, வெண்ணெயை நிறுத்து வியாபாரம் செய்து பிழைத்து வருகிறேன். நீங்கள் வேண்டுமானால் சோதித்துப் பார்த்துக் கொள்ளுங்கள்'' என்றார்.

பிறகென்ன? சந்திரன் கொடுத்த ரொட்டி கொண்டு வரப்பட்டது. நிறுக்கப்பட்டது. அந்த ரொட்டி, ஐம்பது கிராம் குறைவாக இருந்தது கண்டு பிடிக்கப்பட்டது. இத்தனை நாள் ஏமாற்றியது வெண்ணெய் வியாபாரி இல்லை; சந்திரன்தான் என்பது நீதிபதிக்குப் புரிந்தது.

''நீ தவறு செய்துவிட்டு வெண்ணெய் வியாபாரியை குற்றம் சொல்கிறாய். உன்னுடைய பிழைக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கிறேன்'' என்று தீர்ப்பளித்தார் நீதிபதி.

நீதிபதியிடம் தன் குற்றத்தை ஒப்புக்கொண்டு, அபராதத்தையும் கட்டினார் ரொட்டிக்கடைக்காரரான சந்திரன்.



வி.ஜெயலட்சுமி

விடுதலை



பாரத நாட்டின் விடுதலைக்குப்
பேராய் நிலைத்த மந்திரங்கள்
சீரிய தியாகம் செய்தவரின்
சிந்தையில் உதித்த மந்திரங்கள்!

இந்திலாந்து நாட்டினரை
இங்கிருந்து விரட்டிடவே
பங்கிம் சந்திரர் மந்திரமாம்
'வந்தே மாதரம்' என்றிடுவோம்!

'சுயராஜ்யம்' என்றார் நௌரோஜி
சுதந்திரவேட்கையை புரிய வைத்தார்
பயந்தனை நீக்கிய மக்களுமே
போரிட நின்றனர் பக்கத்திலே!

பாடல், படம்:
எஸ். வஜ்ரவேலு

'சுதந்திரம் நமது பிறப்புரிமை'
சொன்னார் தீரர் திலகருமே
மதம் மொழி யென்றே பாராமல்
மக்கள் ஒன்றாய் நின்றனரே!

'ஜெய்ஹிந்த்' என்றார் நேதாஜி
சிறந்த படைக்குத் தளபதியாம்
மெய்யை வருத்தி உயிர் தந்து
மக்கள் துணையாய் ஆனாரே

'இன்குலாப் ஜிந்தாபாத்'
என்றனர் பகத்சிங் தோழரெல்லாம்
அன்னை விலங்கை அறுத்தெரிய
அடைந்தார் தூக்கும் துணிவோடே!

'செய் அல்லது செத்துமடி'
சொன்னார் காந்தித் தாத்தாவே

மந்திரங்கள்

ஜனவரி 26
குடியரசு தினம்





மெய்யாய் ஒருமொழி சொன்னாரே
மக்கள் படையாய்த் திரண்டனரே!

பஞ்ச சீலக் கொள்கையால்
பாரில் வெற்றி கொண்டவர்
அஞ்சிடாத ஜவகர்லால்
அவரைப் போற்றி பாடுவோம்!

சத்தியம் அஹிம்ஸை அன்பாலே
அடைந்தோம் அரிய சுதந்திரமே
அதனைக் காத்து அரசமைக்க
அனுமதித்துடுமே குடியரசு.

அரசியல் சாசனம் அமைந்ததுவே
அழகாய் உரிமைகள் பகர்ந்ததுவே
குடியரசான நம் நாடு
குவலயம் போற்ற உயர்த்திடுவோம்.

விடுதலை தந்தது ஒற்றுமையே!
வளர்ச்சி அளிப்பதும் ஒற்றுமையே!
இடுக்கண் விலக நலம் பெருக
இந்தியர் என்றே ஒன்றிடுவோம்!




* பாம்கூ கார்



மூங்கில்

நானோ கார் நம்மூர்ல இப்ப ஸ்பெஷல்னா, ஜப்பான்ல 'பேம்கூ கார்'தான் ஸ்பெஷல். அதாவது, மூங்கிலால் செய்யப்பட்ட கார். அதுக்குத்தான் 'Bamgoo'ன்னு பேர் வைச்சிருக்காங்க. 'கியோட்டோ' பல்கலைக்கழகத்தின் தொழில்நுட்ப ஆய்வகத்தில், இந்தக் காரை உருவாக்கியிருக்காங்க. இந்தக் காரின் நீளம் 270 செ.மீ., அகலம் 130 செ.மீ., உயரம் 165 செ.மீ. ஒருவர் மட்டுமே பயணம் செய்யும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது இந்த எலக்ட்ரிக் கார். காரின் எடை 60 கிலோ. மூங்கில் கார் என்றதும் மாட்டு வண்டி மாதிரி போகும்ன்னு நினைக்க வேண்டாம். ஒரு தடவை இந்த காரை சார்ஜ் செய்தால் போதும், மணிக்கு 50 கிலோ மீட்டர் அழகாகப் போகலாம்.

* சுல்தான் கோசன்



மீன் பிடிக்கும் நாய்!

மத்திய சீனாவில் உள்ள 'வுசாங்க்' பகுதியில் வசிப்பவர் மிஸ்டர் லின். திடீர்னு அவருக்கு ஏகப்பட்ட புகழ்! காரணம், அவரோட நாய் 'டிங்க் டிங்க்!' மிஸ்டர் லின் ஏரியில் குளிக்கும்போது, அவருடைய உடைகள் மற்றும் பொருட்களைப் பாதுகாப்பது 'டிங்க் டிங்க்'தான். ஆனா, இந்த நாய் கரையில் சும்மா உட்கார்ந்து இருப்பது இல்லை. தண்ணீரில் குதித்து, உயிரோடு இருக்கிற மீன்களைப் பிடிக்க ஆரம்பித்திருக்கிறது. ஒருமுறை, லின் ஏரியில் குளித்துக் கொண்டிருக்கும்போது, பத்து நிமிடங்களுக்குள் மூன்று கிலோவிற்கும் மேல்

முனைவர் ஆசுரா

எடை கொண்ட மூன்று பெரிய மீன் களைப் பிடித்துக் கரையில் போட்டது 'டிங்க் டிங்க்', இப்ப ஊர்க் கண் எல்லாம் டிங்க் டிங்க் மேலதான்.



* இரண்டு தலை பாம்பு

இரண்டு தலை நாகம்!

சீனாவைச் சேர்ந்த லியு, ரயில்வே யில் பணிபுரியும் தொழிலாளி. இவர், பொழுதுபோக்குக்காகப் பாம்புகளை

காரோட்டம்..!

வளர்ப்பவர். ஒரு நாள் பத்து பாம்பு முட்டைகளை வாங்கி தம் வீட்டில் குஞ்சு பொரிக்க வைத்தார். ஒருநாள், குஞ்சுகள் பொரிந்து வெளியே வந்திருப்பதைக் கண்டார். என்ன ஆச்சர்யம்! அவற்றுள் ஒரு குட்டிக்கு இரண்டு தலைகள் இருப்பதைக் கவ னித்தார். இப்போது அக்கம் பக்கம் இருப்போருக்கு, லியு வீடு கண்காட்சி யாகிவிட்டது.



* 'டிங்க் டிங்க்'

உலகிலேயே உயரமான மனிதர்!

உலகிலேயே உயரமான மனிதர் என் னும் பட்டத்துடன், கின்னஸ் உலகச் சாதனைப் புத்தகத்தில் இடம் பெற்றுள் ளார் ஒருவர். அவர், துருக்கி நாட்டைச் சேர்ந்த 'சுல்தான் கோஸன்'. இவரின் வயது 26; தற்போதைய உயரம் 8 அடி, 1 அங்குலம். இதற்கு முன்னால், இந்த பட்டத்தைப் பெற்றவர் சீனாவைச் சேர்ந்த 'போ ஷிஸுன்'. (உயரம் 7 அடி 9 அங்குலம்). சுல்தான் கோஸன் தான், தற்போது உலகிலேயே நீளமான கைகள் மற்றும் பாதங்களைக் கொண்டவராம். மிக உயரமாக இருப்பதால் தன்னால் பள்ளிப் படிப்பைத் தொடர முடிய வில்லை எனக் கூறும் கோஸனுக்கு, மூன்று சகோதரர்களும் ஒரு சகோதரியும் உள்ளனர். ஆனால், அவர்கள் அனை வருமே சராசரி உயரம் கொண்ட வர்கள் என்பதுதான் ஆச்சர்யம்! ●



'அறிவை'த் தா!

இந்திய வரலாற்றில் மிகத் தொன்மையான சிறப்புடையது நாளந்தா பல்கலைக்கழகம்! 'நாளந்தா' என்ற சொல்லுக்கு 'அறிவை அளிப்பவர்' என்று பொருள். குப்தர் காலத்தில், முதலாம் குமார குப்தரால் இது நிறுவப்பட்டது. அவருக்குப்பின் வந்த ஆட்சியாளர்களும், ஹர்ஷரும் அதனை ஆதரித்தனர். இந்தப் பல்கலைக்கழகப் பேராசிரியர்கள், பண்டிதர்கள் என்று அழைக்கப்பட்டனர். திந்நாகர், தர்மபாலர், ஸ்திரமதி, சிவபத்திரர்... போன்றவர்கள் இங்கிருந்தோரில் புகழ்மிக்க பண்டிதர்கள்.

காஞ்சிபுரத்தைச் சேர்ந்த தர்மபாலர் இந்த நாளந்தா பல்கலைக்கழகத்தின் தலைவராகவும் இருந்துள்ளார்.

மாணவர்கள் தங்கிப் படிக்கும் உள்ளிருப்பு பல்கலைக்கழகமாக நாளந்தா விளங்கியது. உணவு, இருப்பிடம் ஆகியவை இலவசமாக வழங்கப்பட்டன. 100 முதல் 200 கிராமங்களிலிருந்து கிடைத்த வருவாயைக் கொண்டு, இந்தப் பல்கலைக் கழகம் பராமரிக்கப்பட்டது. பொதுவான பாடங்களான, தர்க்கம், இலக்கணம், வான இயல், மருத்துவம், கலை போன்றவையும் பாடத்திட்டத்தில் சேர்க்கப்பட்டிருந்தன.

நாளந்தா பல்கலைக்கழகத்தின் இடிபாடுகள், சமீபத்தில் மேற்கொள்ளப்பட்ட அகழ்வாய்வுகள் மூலம் கண்டெடுக்கப்பட்டுள்ளன. சீனப் பயணிகள் விவரித்துள்ள அந்த நிறுவனத்தின் பொலிவினை இன்றைய அகழ்வாய்வின் முடிவுகள் உறுதிப்படுத்துகின்றன.

சீனப் பயணியான இட்சிங் என்பவரது கூற்றின்படி, இங்கு மூன்றாயிரம் மாணவர்கள் தங்கிப் படித்தனர்.

கோளரங்கம் மற்றும் மிகப் பெரிய நூலகம் ஆகியன மூன்று கட்டிடங்களில் செயல்பட்டன. உலகின் பல்வேறு பகுதிகளிலிருந்தும் மாணவர்கள் இங்கு கல்வி பயில்வதற்குத் திரண்டனர். சீனப் பயணியான யுவான் சுவாங்கும் அவர்களில் ஒருவர்.

டி. ஜான்பால்
உ. எண்: 1233,
பன்னிரெண்டாம் வகுப்பு,
ஒசூர்.



கோகுலம் சிறுவர் சங்கம் பட்டியல்

இந்த மாதமும் பட்டியல் தொடர்கிறது. இவர்களின் புகைப்படங்கள் இரண்டாவது, மூன்றாவது அட்டைகளில்!

1401. என்.மகேஷ்வர், பத்தாம் வகுப்பு, எம்.சி.சி. பள்ளி, சென்னை
1402. து.விஜயராகவன், ஆறாம் வகுப்பு, அ.மே.நி. பள்ளி, புதுவை
1403. ஆர்.ஹேமாவதி, நான்காம் வகுப்பு, பி.கே.எஸ். மெட்ரிக் பள்ளி, நாச்சியார்கோவில்
1404. அ. ஹர்ஷிதா மீனாட்சி, முதல் வகுப்பு, நிர்மல் மெட்ரிகுலேஷன் பள்ளி, மதுரை
1405. பா.துர்கதாரிணி, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மே.நி. பள்ளி, கோவை
1406. கு.சமாத்மிகா, நான்காம் வகுப்பு, செவன்த் டே அட்வென்டிஸ்ட் மெட்ரிக் பள்ளி, சென்னை
1407. சி.சிவகாமி, பத்தாம் வகுப்பு, பாரத் மாண்டிஸோரி மெட்ரிக் பள்ளி, இலஞ்சி.
1408. மா.மதிவாணன், எட்டாம் வகுப்பு, ஊ.ஒ.நடுநிலைப்பள்ளி, திருவந்தவார்
1409. எஸ்.ரகு, ஒன்பதாம் வகுப்பு, காமராஜ் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோட்டகாட்டுபாளையம்
1410. எம்.விக்னேஷ், ஆறாம் வகுப்பு, மருவின்கரை மாநகராட்சி பள்ளி, சென்னை
1411. எம்.பிரியதர்ஷிணி, நான்காம் வகுப்பு, ஸ்ருஷ்டி வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, கோவை
1412. ச.சிதம்பரம், எட்டாம் வகுப்பு, அழகப்பா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, காரைக்குடி
1413. பி.கோவர்தன், ஏழாம் வகுப்பு, ராமகிருஷ்ணன் மிஷன் வித்யாலயா உயர்நிலைப் பள்ளி, பெரியநாயக்கன்பாளையம்
1414. எஸ்.அரவிந்த் கோபாலகிருஷ்ணன், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, வாழப்பட்டி
1415. ஜி.மணிபூஷணம், ஏழாம் வகுப்பு, ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளி, ஒசூர்
1416. த.காவ்யா, இரண்டாம் வகுப்பு, யு.ஆர்.சி. பழனி யம்மாள் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஈரோடு
1417. ஏ.எஸ்.நாகராஜன், பதினொன்றாம் வகுப்பு, அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, கவுந்தப்பாடி
1418. எம்.ஜி.ரஞ்சித் குமார், ஆறாம் வகுப்பு, ஸ்ரீராம கிருஷ்ணமிஷன் வித்யாலயா, கோவை



1419. செ.சிந்துஜா, எட்டாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ரத்னபுரி
1420. மு.ஜகதீஸ்வரி, ஆறாம் வகுப்பு, சேரன் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கரூர்
1421. கே.கனகராஜ், பத்தாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, புள்ளம்பாடி
1422. ம. துர்கேஷ், ஏழாம் வகுப்பு, ந.நி.மெ. மேல்நிலைப் பள்ளி, கம்பம்
1423. இ.கோபி, எட்டாம் வகுப்பு, பு.தி.வ.ச. உ.நி. பள்ளி, திருக்கழுக்குன்றம்
1424. அ.எட்வின் அலெக்ஸ், பன்னிரண்டாம் வகுப்பு, டபிள்யூ.ஐ.எம்.எம். மேல்நிலைப் பள்ளி, வாலாஜாபாத்
1425. பொ.செந்தில்குமார், பதினொராம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, சல்லிபட்டி
1426. சி.இன்பராஜா, ஒன்பதாம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, கங்கை கொண்டான்
1427. ச.வெங்கடேஷ், எட்டாம் வகுப்பு, அரசு மே.நி. பள்ளி, மூலக்கரைப்பட்டி
1428. ஆ.கார்த்திக், ஒன்பதாம் வகுப்பு, ஸ்ரீகொங்குராஜா மெட்ரிக் பள்ளி, காமநாயக்கன்பாளையம்
1429. ஜி.லட்சுமி, பன்னிரண்டாம் வகுப்பு, சி.எஸ்.எம். ந.மே.நி. பள்ளி, காஞ்சிபுரம்
1430. ம.ஆகாஷ், ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
1431. கா.பூ. தட்ஷிகா, ஸ்ரீ வித்யாலயா மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, ஓசூர்
1432. கே.அஸ்வினி, கிரேஸ் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1433. கே.பிரபாகரன், ஒன்பதாம் வகுப்பு, மாநகராட்சி உ. நி. பள்ளி, சென்னை
1434. ஜே.இம்மானுவேல் ஜேசுதாஸன், நான்காம் வகுப்பு, ரோஸ்மேரி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, திருநெல்வேலி
1435. ஆ.ஜோயல், ஒன்பதாம் வகுப்பு, அரசு மேல்நிலைப் பள்ளி, கங்கை கொண்டான்.
1436. சு.காவ்யா, ஏழாம் வகுப்பு, பாரதி மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கோவை
1437. ஆர்.வெங்கடரமணன், ஐந்தாம் வகுப்பு, பக்த வச்சலம் மேல்நிலைப் பள்ளி, சென்னை
1438. ஆர்.ரமேஷ், பதினொராம் வகுப்பு, பச்சையப்பன் மேல்நிலைப் பள்ளி, காஞ்சிபுரம்
1439. ஆர்.ஸ்ரீராம், மூன்றாம் வகுப்பு, நோபிள் மெட்ரிக் பள்ளி, விருதுநகர்
1440. க.மு.அபிநயா, ஏழாம் வகுப்பு, பாரதி பள்ளி, கோவை
1441. சி.திரும்லையப்பன், ஐந்தாம் வகுப்பு, பாரத் மாண்டிஸோரி மெட்ரிக் பள்ளி, இலஞ்சி
1442. ஆர்.கிருஷ்ண ஜீவிதா, நான்காம் வகுப்பு, அரசர் தொடக்கப் பள்ளி, தஞ்சாவூர்
1443. தி.அமிர்தா, ஐந்தாம் வகுப்பு, ஸ்ரீநந்த கோபால் ஆரம்பப்பள்ளி, உத்தமபாளையம்



கோகுலம் சிறுவர் சங்கம் - கூப்பன்

என் பெயர் : ....

வயது : ....

பெற்றோர் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

: ....

வீட்டு முகவரி : ....

....

....

புகைப்படம்

நான் கோகுலம் சிறுவர் சங்கத்தின் உறுப்பினராகச் சேர விரும்புகிறேன். உங்கள் நிபந்தனைகளை ஏற்றுக்கொள்கிறேன்.

(கையொப்பம்)

இதுவரை கோகுலம் சிறுவர் சங்கத்துக்கு கூப்பன் அனுப்பாதவர்கள் உடனே அனுப்புங்கள். உங்கள் நண்பர்களுக்கும் விஷயத்தைச் சொல்லி, அவர்களையும் உறுப்பினராக்குங்கள்!

1444. எஸ்.அமுதகுமாரன், ஐந்தாம் வகுப்பு, கிரைஸ்டு தி கிங் மெட்ரிக் மேல்நிலைப் பள்ளி, கும்பகோணம்
1445. ஆர்.தனஸ்ரீ, பத்தாம் வகுப்பு, பாரதி மெட்ரிகுலேஷன் மேல்நிலைப் பள்ளி, கோவை
1446. கி.சோ. சபரிமணிகண்டன், ஆறாம் வகுப்பு, ஸ்ரீராமகிருஷ்ணா மிஷன் வித்யாலயா, கோவை
1447. பே.ஜிம்டோணி, நான்காம் வகுப்பு, ரோஸ்மேரி மாடல் பள்ளி, பாளையங்கோட்டை
1448. மு.ஆனந்த், எட்டாம் வகுப்பு, அரசு ஆண்கள் மே.நி. பள்ளி, கம்பைநல்லூர்
1449. பா.தமிழ்ச்செல்வி, ஐந்தாம் வகுப்பு, சீதா கிங்ஸ்டன் மெட்ரிக் பள்ளி, சென்னை
1450. பா. பார்கவி, எட்டாம் வகுப்பு, வின்செண்ட் மெட்ரிக் உ.நி. பள்ளி, சென்னை

“ஹலோ, டாக்டர் மார்ஷல் இருக்காங்களா?”

“யெஸ், ஸ்பீக்கிங்” என்றார் டாக்டர் பேரி மார்ஷல், “சொல்லுங்க, உங்களுக்கு என்ன பிரச்னை?”

“கொஞ்ச நாளாவே எனக்குக் கடுமையான வயித்துவலி டாக்டர்”, மறுமுனையில் பேசியவர் வேதனையில் துடித்துக் கொண்டிருப்பது அவருடைய குரலிலேயே தெரிந்தது.

“போன வாரம்தான் டாக்டர்கள் என்னைப் பரிசோதனை செஞ்சு பார்த்தாங்க, அல்சர்-ன்னு சொன்னாங்க.”

“ஓ, அப்படியா?” பேரி மார்ஷல் நிமிர்ந்து உட்கார்ந்தார். அல்சர் நோயாளிகளுடன் பேசுவது என்றால் அவருக்குக் கூடுதல் ஆர்வம் உண்டு.

அந்தக் காலத்தில், ‘அல்சர்’ எனப்படும் வயிற்றெரிச்சல் நோய்க்கு மருத்துவம் கிடையாது. வலி குறைவதற்காகச் சில மருந்துகள் கொடுப்பார்கள். அப்புறம் அந்த மருந்தை நிறுத்தினால் மறுபடி வலி குதியாட்டம் போட்டுக் கொண்டு ஓடி வந்துவிடும்.


உலகம் முழுக்க, மருத்துவர்களும் விஞ்ஞானிகளும் இந்த அல்சரை என்ன செய்வது என்றே புரியாமல் திணறினார்கள். அது எதனால் வருகிறது, அதனைத் தவிர்ப்பது எப்படி, குணப்படுத்துவது எப்படி என்று, யாருக்கும் எதுவும் தெரியவில்லை.

இந்த நேரத்தில்தான், ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த ராபின் வாரென் என்ற ஆய்வாளர் பல அல்சர் நோயாளிகளைப் பரிசோதனை செய்து பார்த்தார். அவர்களுடைய உடலில் தென்பட்ட ஒரு சின்ன பாக்டீரியா அவருடைய

மந்திர

✱ ராபின் வாரென் - பேரி மார்ஷல்





வியாதி?

கவனத்தைக் கவர்ந்தது.

அல்சருக்கும் பாக்டீரியாவுக்கும் என்ன சம்பந்தம்? அவருக்குப் புரியவில்லை. அதே மருத்துவமனையில் வேலை பார்த்துக்கொண்டிருந்த பேரி மார்ஷலிடம் சென்றார், "டாக்டர், இதைக் கொஞ்சம் பாருங்களேன்!"

ராபின் வாரென் சொன்னதைக் கேட்டு பேரி மார்ஷலுக்கு உற்சாகம். அவரும் தீவிர பரிசோதனைகளில் இறங்கினார். அல்சர் வியாதி வந்த பெரும்பாலான நோயாளிகளின் உடலில் இந்த பாக்டீரியா குடிகொண்டிருப்பது கண்டு பிடிக்கப்பட்டது.



ஒருவேளை, அல்சர் நோய்க்கே இந்த பாக்டீரியாதான் காரணமாக இருக்குமோ? அப்படி இருந்துவிட்டால், அல்சரைக் குணப்படுத்துவதற்கு மருந்து கண்டு பிடித்து விடலாமே!

உடனடியாக, பேரி மார்ஷல் தனது ஆய்வின் அடுத்த கட்டத்தில் இறங்கினார். ராபின் வாரென் அடையாளம் கண்ட பாக்டீரியாவை அழிப்பதற்கான மருந்துகளைக் கண்டுபிடித்தார். அவற்றை அல்சர் நோயாளிகளுக்குக் கொடுத்துப் பரிசோதனை செய்தார்.

வெற்றி! அல்சர் நோயாளிகள் இந்த மருந்துகளைச் சாப்பிட்ட சில நாள்களுக்குள் குணமானார்கள். மீண்டும் அவர்களுடைய வயிற்றை நுண்ணோக்கியில் பார்த்தபோது, அந்த பாக்டீரியாக்களைக் காணோம்.

சந்தோஷத்தில் குதித்த பேரி மார்ஷல், தன்னுடைய பரிசோதனை முடிவுகளை வெளியிட்டார், "அல்சர் மந்திர வியாதி அல்ல, சாதாரண பாக்டீரியாக்களால் வருவதுதான், அதை முழுவதுமாகக் குணப்படுத்த மருந்து இருக்கிறது."

இப்படிச் சொன்னதும், பல நாடுகளைச் சேர்ந்த டாக்டர்கள், விஞ்ஞானிகள் கிண்டலாகச் சிரித்தார்கள், "யோவ், காமெடி பண்ணாதேய்யா.. சும்மா உட்காரு."

பின்னே? அவர்களெல்லாம் பல ஆண்டுகளாக ஆராய்ச்சி நடத்தியும் கூட, ஒன்றும் புரியாமல் திணறிக் கொண்டிருக்கிற ஒரு விஷயத்தை, இந்த இளைஞர் சர்வசாதாரணமாகத் தீர்த்து வைக்கிறாரே, யார் நம்புவார்கள்?

பேரி மார்ஷல் வெறுத்துப்போனார்.

என்.சொக்கன்

ஆனால், நம்பிக்கை இழக்கவில்லை. தொடர்ந்து வெவ்வேறு மருத்துவ அமைப்புகளைச் சந்தித்து, தன் ஆய்வுகளை விளக்கிச் சொல்லி ஆதரவு கேட்டார். ஆனால் எல்லோரும் அவரை வெளியே தள்ளிக் கதவைச் சாத்தி விட்டார்கள்.

கடைசியாக, பேரி மார்ஷல் ஒரு முடிவுக்கு வந்தார். மறுநாள், தன்னுடைய நண்பர்கள் மற்றும் உதவியாளர்களை அழைத்தார்.

அவர்களைச் சாட்சியாக வைத்துக்கொண்டு, கடகடவென்று ஒரு தம்ளர் தண்ணீரைக் குடித்தார்.

அந்தத் தண்ணீரில், அல்சர் உண்டாக்கும் பாக்டீரியாக்கள் கோடிக் கணக்கில் நிரம்பிக் கிடந்தன. அவற்றைக் குடித்து, தன்னுடைய உடம்பையே பரிசோதனைச் சாலையாக மாற்றிக்கொண்டு விட்டார் பேரி மார்ஷல்.

இரண்டு நாள்களில், அவருக்கு வயிற்று வலி வந்தது. தலை சுற்றியது; வாந்தி வந்தது; 'இவை எல்லாமே அல்சருக்குரிய அறிகுறிகள்.'

உடனடியாக, சக ஆய்வாளர்கள் அவருடைய வயிற்றைப் பரிசோதனை செய்துபார்த்தார்கள். பாக்டீரியாக்கள் நன்றாகத் தங்களுடைய வேலையைக் காட்டியிருந்தன.

சட்டென்று, தாம் கண்டுபிடித்த மருந்துகளைக் குடித்தார் பேரி மார்ஷல். அல்சர் இருந்த இடம் காணாமல் குணமாகிவிட்டது.

பேரி மார்ஷலின் அதிரடியைப் பார்த்து அறிவியல் உலகம் அசந்து போய் நின்றது.

அதன்பிறகுதான், பேரி மார்ஷல் பேசுவதை மற்றவர்கள் காது கொடுத்துக் கேட்க ஆரம்பித்தார்கள். அவர் கண்டுபிடித்த பாக்டீரியா, அதற்கான மருந்துகளைப்பற்றித் தீவிர ஆய்வுகள் நடைபெற்றன.

இதனால், சில ஆண்டுகளில் அல்சருக்கு முழுமையான தீர்வு கண்டறியப்பட்டுவிட்டது. இந்தச் சாதனைக்காக, ராபின் வாரென், பேரி மார்ஷல் இருவருக்கும் நோபல் பரிசுவழங்கப்பட்டது.

இன்றைக்கு நாம் சர்வ



"அல்சர் மந்திரவியாதி அல்ல, சாதாரண பாக்டீரியாவால் வருவதுதான்!"


சாதாரணமாக நினைக்கும் பல நோய்கள், ஒருகாலத்தில் 'மந்திரவியாதி'களாக பயமுறுத்தியவைதான். சாதாரண காய்ச்சல், சளி, ஜலதோஷம், தலைவலி, சிறிய ரத்த காயத்தால் உயிர் இழந்தவர்கள்கூட உண்டு.

இப்படி நிச்சயமில்லாமல் இருந்த மருத்துவ உலகத்தை, படிப்படியாக முன்னேற்றிக் கொண்டுவந்தது அறிவியல்தான். இதன்மூலம் பல தீராத நோய்கள் அழித்தொழிக்கப்பட்டன. நம்முடைய சராசரி வாழ்நாளும் அதிகரித்திருக்கிறது.

மருத்துவமும் அறிவியலும் கைகோத்துக்கொண்டுவிட்டால், மனிதனுக்கு நல்ல நேரம்தான்! ●

புத்திசாலித் தவளை!

கதை : நிருபமா,புனே　　　படம் : பிள்ளை



கலை மேதைகள்!

கௌதம் ராம்

காலத்தை வென்று நிற்பவர்கள் என்று பார்த்தால், வரலாற்றின் பக்கங்களில் கலைஞர்களுக்கு மிகப் பெரிய இடம் உண்டு. ஓவியம், இசை, பாட்டு, சிற்பம்... என்று தங்கள் கலைத் திறனால் புகழ்பெற்ற சிலரை இப்போது அறியலாம்.

சிம்ஃபொனி!

மேற்கத்திய இசை என்றால் நம் நினைவுக்கு வருகிற பெயர் பீதோவன். உலகம் எங்குமுள்ள இசை ரசிகர்களும், இசைக் கலைஞர்களும் பீதோவனைக் கொண்டாடுகிறார்கள். இவர் உருவாக்கிய சிம்ஃபொனி இசை நூற்றாண்டுகள் கடந்தும் பேசப்படுகிறது. 1770 டிசம்பர் 17ஆம் தேதி ஜெர்மனியில் ஓர் இசைக் கலைஞரின் மகனாகப் பிறந்த இவர், பத்தாவது வயதிலேயே தமது இசைத் திறமையை வெளிப்படுத்தினார். பத்து வயதில் நான்கு சிம்பனிகளை உருவாக்கி உலகின் கவனத்தை ஈர்த்த பீதோவன், மொத்தம் ஒன்பது சிம்ஃபொனிக்களை உருவாக்கினார். அவற்றில் ஒன்பதாவது சிம்ஃபொனி அவருடைய 'மாஸ்டர் பீஸ்' என்று போற்றப்படுகிறது. பிற்காலத்தில் இவருக்கு செவித்திறன் பழுதானது. ஆனாலும், இசையாகவே வாழ்ந்த பீதோவன், 1927ஆம் ஆண்டு மரணமடைந்தார். ஆனால், அவர் இசை இன்னமும் உயிர்த்துடிப் போடு ஒலித்துக் கொண்டிருக்கிறது.

ஆஸ்திரிய மேதை!

பீதோவனைப் போலவே புகழ் பெற்ற இன்னொரு இசை மேதை மொசார்த். இவர் ஆஸ்திரியாவைச் சேர்ந்தவர். "உலகின் அத்தனை புகழ் பெற்ற இசை மேதைகளுக்கும் நான் மாணவன். அவர்கள் உருவாக்கிய இசை வடிவிலிருந்து நான் கற்றுக் கொண்டது ஏராளம்! இடைவிடாத கற்றலின் மூலமே என்னால் ஒரு புகழ் பெற்ற இசைக் கலைஞராக ஆக முடிந்தது'' என்று தம்மைப் பற்றிக் கூறிய மொசார்த், மழலை மேதை! அவரது ஆறாம் வயதில் ஆஸ்திரியா நாட்டு மகாராணியின் முன்பு,



★ மைக்கேல் ஜாக்சன்



தமது இசைத் திறமையை வெளிப்படுத்தும் வாய்ப்பு கிடைத்தது அவருக்கு. ஆனால் காலப் போக்கில் தமக்கு உரிய அங்கீகாரம் கிடைக்கவில்லை என்ற குறை அவருக்குள் எழுந்தது. 35 வயதுக்குள்ளாகவே, இசைத் துறையில் தமது நிலைத்த புகழுக்கான சாதனைகளை நிகழ்த்திய, மொசார்த் 1791ல் இயற்கை எய்தினார்.



* மொசார்த்

தம் குரல் வளத்தால் உலக ரசிகர்களின் மனதைக் கொள்ளை கொண்ட



* பீதோவன்

பாடகர்கள் என்று இரண்டு பேரைக் குறிப்பிடலாம். ஒருவர் அண்மையில் மறைந்த மைக்கேல் ஜாக்சன். இன்னொருவர் எல்விஸ் பிரெஸ்லி.



* லியனார்டோ டாவின்சி

'பாப்' சக்ரவர்த்தி!

1958ல் பிறந்த, மைக்கேல் ஜாக்சன் என்று அழைக்கப்பட்ட மைக்கேல் ஜோசப் ஜாக்சன், 'பாப் இசை சக்ரவர்த்தி' என்ற புகழைப் பெற்றார். ஆப்ரிக்க இனத்தில் பிறந்த அமெரிக்கரான இவர், மேடையில் ஏறி பாட்டுப் பாடியபடி ஆடுகிற டான்சுக்கு மயங்கி, கூடவே ஆட்டம்போட்டு ரசித்தனர் ரசிகர்கள். 'ஜாக்சன் 5' என்ற பெயர்கொண்ட ஜாக்சனின் சகோதரர்கள் ஆரம்பித்த இசைக் குழுவின் மூலம் பாடகராக அறிமுகமான மைக்கேல் ஜாக்சன், 1971ல் தனியாக மேடை ஏறினார். 82ஆம் ஆண்டு இவர் வெளியிட்ட 'த்ரில்லர்' என்ற இசை ஆல்பம் சக்கைப் போடு போட்டது. அதன் பிறகு ஜாக்சனுக்கு ஏறுமுகம்தான். மைக்கேல் ஜாக்சனின் வாழ்க்கையில் சர்ச்சைகளுக்கும் பஞ்சமில்லை. கடந்த ஜூன் மாதம் அவர் இறந்த பிறகுகூட அவரது மரணம் பற்றியும், சொத்து குறித்தும்கூட சர்ச்சைகள் எழுந்தன.

ராக் அண்ட் ரோல்!

அமெரிக்காவைச் சேர்ந்த நடிகர், பாடகர் எல்விஸ் ஆரோன்

பிரெஸ்லி. அமெரிக்காவிலும், மற்ற மேற்கத்திய நாடுகளிலும் புகழ் பெற்ற 'ராக் அண்டு ரோல்' இசையில் வல்லவர் அவர். 'எல்விஸை ஒரு முறை நேரில் காண மாட்டோமா? அவரது குரலை நேரில் கேட்க மாட்டோமா?' என்று ஏங்கிய அமெரிக்க ரசிகர்கள் பலர். அவரது முதல் இசை ஆல்பமான 'ஹார்ட் பிரேக் ஹோட்டல்' விற்பனையில் சாதனை புரிந்தது. கட்டாய ராணுவ சேவைக்குச் சென்ற எல்விஸ், தம் பணிக் காலம் முடிந்து, மீண்டும் இசை உலகுக்குத் திரும்பினார். முன்பைவிட, ரசிகர்களின் ஆதரவு பன்மடங்காகியது. இசை ஆல்பங்கள் சூப்பர் டூப்பர் ஹிட் ஆயின. ஏராளமான பணம் சம்பாதித்தாலும், அதில் பெரும்பகுதியை இழந்த எல்விஸ், தமது 42ஆம் வயதில் மாரடைப்பால் இறந்தார்.


* எல்விஸ்

இத்தாலியக் கலைஞர்

பதினைந்தாம் நூற்றாண்டைச் சேர்ந்த ஓவியர் மற்றும் சிற்பி மைக்கேலாஞ்சலோ இத்தாலியைச் சேர்ந்தவர். முறைப்படி ஓவியம் மற்றும் சிற்பக்கலையைப் பயின்றவர். இவர் உருவாக்கிய பீடா, டேவிட் மற்றும் மோசஸ் ஆகிய சிற்பங்கள் இவரது புகழின் அடையாளமாக நிலைபெற்றுள்ளன. வாடிகன் நகரில் உள்ள புனித பீட்டர் தேவாலயத்தை வடிவமைத் தவர் இவர்தான்.

இரண்டு கையாலும் வரைந்தவர்!

'மோனாலிசா' என்றவுடன், புன்னகைக்கும் அழகியின் ஓவியம் நினைவுக்கு வரும். அதனை சிருஷ்டித்தவர் லியனார்டோ டாவின்சி. இவர் ஓவியர் மட்டுமில்லை. சிற்பி, இசை விற்பன்னர், கவிஞர், தத்துவ மேதை, கட்டடக்கலை நிபுணர், வானியல் மற்றும் கடல் ஆராய்ச்சியாளர்... என்று பன்முகத் திறமைகள் படைத்தவர். மனிதன் பிற்காலத்தில் கண்டுபிடிக்கப்போகும் பல விஞ்ஞானக் கருவிகளை முன் கூட்டியே கற்பனை செய்து, ஓவியங்களாகத் தீட்டியவர் இவர். ஒரே நேரத்தில் இரண்டு கைகளினாலும் ஓவியம் வரையும் திறமை கொண்டவர்!

நவீன ஓவியத் தந்தை!

இருபதாம் நூற்றாண்டின் இணையற்ற ஓவியராக போற்றப்படும் பாப்லோ பிகாசோ 1881ல் ஸ்பெயினில் பிறந்தவர். இவரது ஓவியங்கள் கியூபிசம் என்ற நவீன பாணி ஓவிய வகையைச் சேர்ந்தவை. 'ஒரு காட்சியை கண்கள் எப்படிப் பார்க்கின்றனவோ அது மாதிரியே வரைவதில் என்ன புதுமை உள்ளது? அந்தக் காட்சி மனத்தில் ஏற்படுத்தும் உணர்ச்சிகளைத்தான் ஒரு ஓவியம் பிரதிபலிக்க வேண்டும்' என்பது பிக்காசோவின் கருத்து. இன்றைய மாடர்ன் ஆர்ட் வடிவங்களின் முன்னோடியான இவரை 'நவீன ஓவியத்தின் தந்தை' என்கிறார்கள்.

இந்தியாவின் கலைஞர்களுள் ஓவியர் ராஜா ரவிவர்மா, அக்பரின் அவையை அலங்கரித்த தான்சேன்... இப்படி ஒரு நீண்ட வரிசையைச் சொல்ல முடியும்.

டியர் குட்டீஸ்... இது உங்களுக்கான போட்டி!



டியர் குட்டீஸ்,

'சந்தோஷம்னா' என்ன? அதைப் பத்தி நீங்க என்ன நினைக்கிறீங்க? நீங்க சந்தோஷப்பட்ட நேரம் எது? உங்களை சந்தோஷப்படுத்தின விஷயம் எது? எங்கே... பேப்பர் பேனாவை எடுங்க...

நீங்க சந்தோஷப்பட்ட...

உங்களை சந்தோஷப்படுத்தின...

அந்த விஷயத்தை பரபரன்னு எழுதிக் குவியுங்க. பிரசுரமாகும் ஒவ்வொரு கடிதத்துக்கும் பரிசு உண்டு.

என்ன ரெடியாகிட்டீங்களா?

போட்டியில் பங்கேற்கும் உறுப்பினர்கள், தவறாமல் தங்கள் உறுப்பினர் எண், வீட்டு விலாசம் ஆகியவற்றைத் தெளிவாக எழுதியனுப்பவும்.

- சிறுவர் சங்க உறுப்பினர்கள் மட்டுமே இந்தப் போட்டியில் பங்கு கொள்ள முடியும்.
- சிறுவர் சங்கப் பட்டியலில்... புகைப் படத்தின் கீழ்கொடுக்கப்பட்டுள்ள எண்ணே, உங்கள் உறுப்பினர் எண்.
- இன்னமும் அடையாள அட்டை பெறாதவர்கள், அந்த எண்ணைக் குறிப்பிட்டு போட்டியில் பங்கேற்கலாம்.

அனுப்ப வேண்டிய முகவரி :

'சந்தோஷம் எது?' பகுதி,
ஆசிரியர், கோகுலம்,
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை,
ஈக்காடுதாங்கல், சென்னை - 32

ஆசிரியர் : மாணவர்களே, நீங்க நல்லாப் படிச்சு நம்ம நாட்டுக்கு நல்ல பேரு வாங்கித் தரணும்.

மாணவன் : ஏன் சார், இந்தியாங்கிற பேரே நல்லாத்தானே இருக்கு?








''எங்க வீட்ல என்னை மடையன், முட்டாள்னு திட்டுவாங்க. உங்க வீட்ல?''

''எங்க வீட்ல உன்னைப் பத்தி அவ்வளவாத் தெரியாது.''

''உன் அப்பா பெயரை எழுதி ஏன் பெட்டிக்குள்ளே வச்சு பூட்டுற?''

''என் பெயரை காப்பாத்துன்னு என் அப்பா சொன்னாரு.''

- ஜி.லக்ஷ்மி,
பன்னிரண்டாம் வகுப்பு,
காஞ்சிபுரம்





நேர்முகத் தேர்வில் :

"உங்கள் பெயர்?"

"கந்தவேல்."

"வீட்டில் எப்படி கூப்பிடுவாங்க?"

"கிட்ட இருந்தா மெதுவாக் கூப்பிடு வாங்க. தூரத்தில் இருந்தா சத்தமா கூப்பிடுவாங்க."



"ஏனப்பா உனக்கு சொந்த ஊர் எது?"

"அந்த அளவுக்கு நமக்கு வசதி இல்லீங்க, சொந்த வீடுதான் இருக்கு."

ஜி.பிரபாகரன், உ.எண் 961. காஞ்சிபுரம்






ஃபர்ஸ்ட் ரேங்க்!

சரவணன் : நான் எக்ஸாம்ல ஃபர்ஸ்ட் ரேங்க் எடுத்த மாதிரி கனவு கண்டேன்.

ராஜா : எப்படா தூங்கினே?

சரவணன் : 'எக்ஸாம் ஹால்'லதான்.



சத்தியன் சீவன் சுந்திரன். ஆசிரியர் : ஸ்ம்ரித்தி ராம் வெளியீடு : சிவாலயம் நூல் வெளியீட்டாளர்கள், எண் 14, கைலாஷ் நகர் முதல் தெரு, பாக்கமுடையான்பட்டு, புதுச்சேரி - 605 008

குழந்தைகளுக்கு மிகவும் பிடித்தமான மாயாஜாலக் கதை! நல்லவனான அண்ணன், தம்பிகளின் பொறாமையால் கஷ்டப்பட்டாலும், அவன் நற்குணத்துக்கு பல்வேறு உதவிகள் கிடைக்கின்றன. இறுதியில் மன்னனாகிறான். இதை அழகான கதையாக வடித்திருக்கிறார் ஆசிரியர். குழந்தைகளைக் கவரும்.



பெ.தூரனின் சிறுவர் கதைக் களஞ்சியம். வெளியீடு : பழனியப்பா பிரதர்ஸ், கோனார் மாளிகை, 25 பீட்டர்ஸ் சாலை,சென்னை - 600 014.

சிறுகதை, நாவல்; குழந்தைப் பாடல்கள் என்று பல துறைகளிலும் புகழ்பெற்றவர் பெ.தூரன். குறிப்பாக குழந்தை இலக்கியத்துறையில் அவர் பங்கு சிறப்பானது.

அவர் எழுதிய இரண்டு நாவல்கள், சிறுகதைகளென்று அழகான தொகுப்பு. குழந்தைகள் உலகைப் படம்பிடிப்பது போல விலங்குகள், பறவைகள், ஊர்வன... என்று பலப்பல கதாபாத்திரங்கள் பேசுகின்றன. நீதியை உணர்த்துகின்றன. நேர்த்தியான கட்டமைப்பும், தெளிவான அச்சும் புத்தகத்தின் சிறப்பைக் கூட்டுகின்றன.

'டைம் மெஷின்' இல்லாத பயணம்!

பூர்வா ஆசிரியர் : லஷ்மி தேவ் நாத். வெளியீடு : கிழக்கு பதிப்பகம், எண் 33/15, எல்டாம்ஸ் சாலை, ஆழ்வார்ப்பேட்டை, சென்னை - 600 018

'குழந்தைகளுக்குப் புரிகிற மாதிரி - பிடிக்கிற மாதிரி, ஆழ்வார்களின் கதையைச் சொல்ல முடியும்' என்பதை நிரூபித்திருக்கிறார் ஆசிரியர். 'டைம் மெஷின்' இல்லாமல் கடந்த காலத்தில் பயணம் செய்வது, ஆழ்வார்களைக் காண்பது, அவர்கள் யார்? சிறப்பு என்ன..? என்பதையெல்லாம் கேள்விகளாக, உரையாடல்களாக வெளிப்படுத்தியுள்ள விதம் மிக அருமை. தமிழில் மொழிபெயர்த்துள்ள பத்மா நாராயணனின் பங்கும் சிறப்பானது.


-ராகவன்



● நியூஸ் ரூம் பகுதியின் மூலம் பல விந்தையான செய்திகளைத் தெரிந்து கொள்ள முடிந்தது. - **பி.சர்வேஸ்வரன், உ. எண் 456, மதுரை** ● 'உண்டது அமுதம் என்றால் இறக்க மாட்டான்' என்பதை அரசருக்கு உணர்த்திய வேலனின் சாதுர்யம் படக்கதை அமுதமென ருசித்தது. - **த.சந்தனக்குமார், வி.எம்.சத்திரம்** ● வளர்கவி எழுதிய மனம் மாறிய நரி கதைப்பாடல் மிகப் புதுமையாக ரசிக்கும்படி இருந்தது. - **எம்.ஜி. பரத், திண்டுக்கல்** ● உயர்வான இலட்சியத்துடன் செயல்பட்டால், அதனைவிட உயர்வான பலன் கிடைக்கும் என்பதை 'மைக்ரோவேவ் அவன்' கண்டுபிடிப்பு உணர்த்தியது. **- கே.எஸ்.யோகேஸ்வரன், உ. எண் 146, திருச்சி** ● படிப்பைப் போல பண்பாடும் முக்கியம். அதுவே மாணவர்களாகிய நாம், ஆசிரியர்களுக்கும், நம், பள்ளிக்கும் சேர்க்கும் பெருமை என்பதை உணர்த்திய 'அவள் பெயர் அபி' கதை அருமை. - **ந.பிருந்தா, உ. எண் 1098, மயிலாடுதுறை** ● திரிக்கழுக்குன்றத்தின் மகத்துவத்தைப் படித்து பிரமித்தோம். அங்கே உறையும் வேத கிரீஸ்வரர், திருபுரசுந்தரியை சங்கு தீர்த்தத்தில் குளித்து வழிபட வேண்டும் என ஆவல் பிறந்தது. - **பி.நிகிலேஷ், சென்னை** ● ஏ.ரகுபதியின் அவள் பெயர் அபி சிறு கதை, உதவி செய்வதன் மேன்மையை அழகாய்ப் பறைசாற்றியது. மேலும் ஸ்கூல் கலாட்டா பகுதியில், எஸ்.தணிகைவேலின் வகுப்பறையில் நிகழ்ந்த பாவச்செயல் நிகழ்ச்சி சிரிப்பை அதிகரித்தது. - **மு.அருண்குமார், உ. எண் 670, ஓசூர்** ● படிப்பினைக் கதையின் மூலமாக, எந்தச் சந்தர்ப்பத்திலும் மனம் தளர்ந்து விடக்கூடாது என்று புரிந்து கொண்டேன். இது சிறுவர்களுக்கு மட்டுமல்ல, பெரியவர்களுக்கும் பொருந்தும். - **எஸ்.வினித் மாதவன், உ. எண் 1196, மதுரை.** இயேசுபிரான் அவதாரப் புனிதம் சிறக்கும் வண்ணம் அன்புப் பரிசுகள் பரிமாற அழைத்த கோகுவின் மொழிகள் அர்த்தமுள்ளவை. - **ச.ஆ.கேசவன். இனாம்மணியாச்சி** ● பழங்கால விளையாட்டுகளை நினைவுறுத்திய கவர் ஸ்டோரி அருமை. - **இ.டி.ஹேமமாலினி, சென்னை** ● நாடோடிப் பாட்டில் மகாபாரதக் கதையையே சொன்ன தமிழமுது பகுதி மிக

பண்பையும் வளர்க்கிறது!

அருமை.- **ஆர்.அம்பிகா, மதுரை** ● டாக்டர் கு.கணேசன் எழுதிய குளிர்கால நோய்கள் பற்றிய மருத்துவக் குறிப்புகள் மிகவும் பயனுள்ளவை. - **ஜி.அப்துல்பாரி, பழனி** ●'அனுபவம்' பகுதியில் இடம்பெறும் அறிஞர்களின் திறமை என்னைப் போன்ற வளரும் மாணவ மாணவியருக்கு நல்ல படிப்பினை தருகிறது. - **எம்.சிவரஞ்சனி, உ. எண் 179, திருவாரூர்** ● கோகுலத்தில் வரும் புதிர்கள், அறிவியல் செய்திகள், பாடல்கள் ஆகியவற்றை எங்கள் பள்ளியில் நடைபெறும் அறிவியல், தமிழ், கணித மன்றங்களில் வாசிக்கிறோம். - **ம.குமார், எட்டாம் வகுப்பு, ஊ.ஒ.ந.நி. பள்ளி, திருவந்தவார்**



விடையைச் சொல்; பரிசை வெல் - 31

1. ப∴பின்ஸ் பறவைகளை .... என்று அழைப்பர்.
2. ஔரங்கசீப்பின் மனைவி பெயர் ....
3. நாளந்தா பல்கலைக்கழகத்தை நிறுவியவர் ....
4. மிகச் சிறிய குரங்கினத்தின் பெயர் ....
5. மாலத்தீவில் பேசப்படும் மொழி ....

என் பெயர் : ....

வகுப்பு, பள்ளி : ....

....

வீட்டு முகவரி : ....

....

பின்கோடு ....

போட்டி

இங்கே ஐந்து கேள்விகள் கேட்கப்பட்டுள்ளன. விடைகளை நீங்கள் எங்கும் தேடிச் செல்ல வேண்டாம். இதே இதழில்தான் உள்ளன. அவற்றைக் கண்டுபிடித்து எழுதுங்கள். கூப்பனையும் பூர்த்திசெய்து இந்தப் பக்கத்தைக் கத்தரித்து அனுப்புங்கள். ஆசிரியர் தீர்ப்பே இறுதி.

பரிசு ரூபாய் 1000/-



முடிவு தேதி : 30.1.2010

அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர், கோகுலம், (பரிசுப் போட்டி)
47-NP, ஜவாஹர்லால் நேரு சாலை, ஈக்காடுதாங்கல்,
சென்னை - 32

கோகுலம் சிறுவர் சங்கம்

உறுப்பினர்கள்


1426


1427


1428


1429


1430


1431


1432


1433


1434


1435


1436


1437


1438


1439


1440


1441


1442


1443


1444


1445


1446


1447


1448


1449


1450

பெயர் மற்றும் விவரங்கள் 65 ஆம் பக்கம்

Registered with the Registrar of Newspaper of India under No. 24280/72 Registered No. TN/CC(S)DN/109/09-11 • Licensed to post without prepayment under PMG's Licence No. WPP TN/CC(S)DN/47/09-11 • Registered as a Newspaper in Srilanka

